Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+11 விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field



உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை – 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற.அவ்வல் 06 (16.04.2005) சனிக்கிழமை இதழ்:199

# கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த முகாம் மீது நள்ளிரவில் தாக்குதல்!

## வெலிக்கந்தவில் 9 பேர் பலி!


(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்தின் வெலிக்கந்த பிரதேசத்தில் சொறிவில் ஆற்றங்கரையில் காட்டுப் பகுதிக்குள் கருணாவின் சகாக்களால் அமைக்கப்பட்டிருந்த மூன்று முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஈ.என்.டி. எல்.எவ்வைச் சேர்ந்த மூவரும், கருணாவின் சாக்கள் ஆறு பேரும் உயிரிழந்தனர். கருணாவின் முக்கிய சகாவான பிள்ளையான் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

சொறிவிலவுக்கு அண்மையிலுள்ள வண்ணத்துறையடியில் அடர்ந்த காட்டுப் பகுதியில் கருணாவின் சகாக்கள் அண்மையில் ஐந்து முகாம்களை அமைத்திருந்தனர்.

தீவுச்சேனையில் அமைக்கப்பட்டிருந்த முகாம் தொடர்பான தகவல்களை சண்டே லீடர் வெளியிட்டதை அடுத்து இந்த முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து தீவுச்சேனையில் அமைக்கப்பட்டிருந்த முகாமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகாமில் கூட இருந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டனர்!

(கொழும்பு)

வெலிக்கந்த - அரலகன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிவில் காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை

தர் விஜயன் உட்பட மூவர் தங்கியிருந்தனர்.

விஜயனுக்கும், கருணாவின் நெருங்கிய சகாவான பிள்ளையானுக்

## திருக்கோவில் பிரதேச செயலர் நேற்றிரவு சுட்டுக் கொலை!

(அம்பாறை)

திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.கே தவராசா (வயது 38) நேற்றிரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

நேற்றிரவு 7.45 மணியளவில் - திருக்கோவில் அரியநாயகம் வீதியில்

## பொதுக்கட்டமைப்பு தாமதமடைவதால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை மோசமடைந்து வருகின்றது!

### அயர்லாந்து அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன்

குதலில் ஈ.என்.டி. எல்.எவ்வைச சேர்ந்த மூவரும், கருணாவின் சாக்கள் ஆறு பேரும் உயிரிழந்தனர்.

துறையடியில் அடர்ந்த காட்டுப் பகுதியில் கருணா

கப்பட்டிருந்த முகாமை (12 ஆம் பக்கம் பார்க்க)

# முகாமில் கூட இருந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டனர்!

(கொழும்பு)

வெலிக்கந்த - அரலகன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிவில் காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பவத்திற்கு கருணாவின் சகாக்களும், ஈ.என்.டி.எல்.எப் முக்கியஸ்தர் விஜயனுக்கும் இடையிலான முரண்பாடே காரணம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சொறிவில் காட்டுப் பகுதியில் முகாம் அமைத்திருந்த - கருணாவின் சகாக்களுடன், இந்தியாவிலிருந்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவினால் அழைத்துவரப்பட்ட ஈ.என்.டி.எல்.எப் முக்கியஸ்தர் விஜயன் உட்பட மூவர் தங்கியிருந்தனர்.

விஜயனுக்கும், கருணாவின் நெருங்கிய சகாவான பிள்ளையானுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் விளைவாகவே இரு தரப்பினரும் மோதிக்கொண்டதாக சில தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் விஜயன் உட்பட ஈ.என். டி. எல்.எப் உறுப்பினர் மூவரும் கருணாவின் சகாக்களான ஆறுபேரும் உயிரிழந்ததாகவும், பிள்ளையான் காயமுற்றதாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவில் பிரதேச செயலர் நேற்றிரவு சுட்டுக் கொலை!

(அம்பாறை)

திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.கே தவராசா (வயது 38) நேற்றிரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

நேற்றிரவு 7.45 மணியளவில் - திருக்கோவில் அரியநாயகம் வீதியில் வைத்தே இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.

காஞ்சிரங்குடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு - மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை - இவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள், இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பு தாமதமடைவதால்

# பாதிக்கப்பட்ட மக்களின் நிலை மோசமடைந்து வருகின்றது!

## அயர்லாந்து அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன்

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பொருட்களை வழங்குவது தொடர்பாக, பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் இதுவரை உடன்படாத காரணத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான நெருக்கடிகள் அதிகரித்துச் செல்வதாக அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - அயர்லாந்தின் உள்துறை அமைச்சரும் கடல்கடந்த நாடுகளின் அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதியுமான கோணர் லெனிகன்னிடம் தெரிவித்தார்.

அயர்லாந்தின் தலைநகர் டப்ளினிலுள்ள வெளிவிவகார அமைச்சக திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பின்போதே அரசியற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சொறிவில் தாக்குதல் சம்பவத்துக்கு படையினரே பொறுப்பேற்க வேண்டும்!

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வெலிக்கந்த - சொறிவில் காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

இந்தச் சம்பவத்துக்கு தமிழ்த்தேச விரோத சக்திகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்தும் இராணுவத்தினரே பொறுப்பேற்க வேண்டும் என விடு தலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தயா மோகன் கருத்துத் தெரிவிக்கையில் -

சொறிவில் பகுதியில் கருணாவின் சகாக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்து சடலங்களே மீட்பு; எஞ்சிய நான்கும் எங்கே?

## ஊடகங்களில் பரபரப்புத் தகவல்

(பொலனறுவ)

சொறிவில் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டிருந்ததை அந்தப் பகுதி கிராமவாசிகள் அவதானித்தபோதும் - ஐந்து சடலங்களே மீட்கப்பட்டிருப்பதாக படையினர் கூறியிருப்பது குறித்து பல்வேறு சந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ளன.

தாக்குதலின் பின்னர் - 9 சடலங் கள் இருந்ததாகவும் - ஐந்து சடலங்கள் மட்டும் படையினர் மீட்டதாக அறிவித்துள்ள நிலையில் எஞ்சிய சடலங் களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து கேள்வி எழுந்துள்ளது.

கொல்லப்பட்ட எஞ்சிய நால்வரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினருடன் எடுத்த புகைப்படங்கள் சிக்கின!

## விரைவில் வெளியிடுவதாக இணையத்தளம் தெரிவிப்பு

வெலிக்கந்த - சொறிவில் பகுதியில் நேற்று அதிகாலை கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த முகாம்களில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் - அங்கிருந்த ஆயுதக்குழுவினருக்கு இராணுவத்தினர் பயிற்சியளிப்பது தொடர்பான புகைப்படங்கள் சிக்கியிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமிழ் இளைஞர்களுக்கு இராணுவ அதிகாரிகள் பயிற்சி வழங்குவது மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து எடுத்த புகைப்படங்கள் தாக்குதல் நடத்தியோரிடம் சிக்கியதாகவும்-

இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

# பணிநிலைக்கான வேண்டுகை

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இயங்கும் கல்வி தொழில் கல்வி அபிவிருத்தி நிறுவனத்திற்கு (ESDC) கீழ்வரும் பணிநிலைகளுக்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தகைமை உடையவர்கள் தங்கள் தன் வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகை, கல்விச்சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிநிலைகள்**

01) நிர்வாக அலுவலர்.
02) உணவு விநியோகஸ்தர். (பெண்)
03) உணவு விநியோகஸ்தர். (ஆண்)
04) பிரதான சிற்றூழியர்.
05) கற்கை மண்டப பராமரிப்பாளர்.
06) பராமரிப்பாளர்.
07) மருத்துவ உதவியாளர்.
08) பிரதான சமையலாளர்.

**தகைமைகள்**

**பணிநிலை :- 01**
க.பொ.த (உ/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன் அரச/ அரசசார்பற்ற/ தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை :- 02,03**
உணவு விநியோக வேலையில் ஆகக்குறைந்த 02 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பதுடன் 40 - 55 அகவைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை :- 04**
ஆண்டு 10 கல்வி கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவத்துடன் 35-50 அகவைக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை :- 05, 06**
ஆண்டு 10 கல்வி கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை :- 07**
க.பொ.த (சா/த) தேர்ச்சி அடைந்திருப்பதுடன் பணி முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை :- 08**
சமையல் வேலையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை செய்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் –
21.04.2005 வியாழக்கிழமை காலை 11.00 மணி
இடம் :– தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம். (கந்தசாமி கோயில் அருகாமை),
கிளிநொச்சி.

ஆளணி நிர்வாகப்பகுதி
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(C/4058)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருதங்கேணியில் 2774 வீடுகள்!

## யாழ். அரச அதிபர் கணேஷ் தகவல்

(வடமராட்சி)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் அரசசார்பற்ற நிறுவனங்களினால் 2774 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடற்கரையில் இருந்து 200 மீற்றருக்கு வெளியே, மேற்படி நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய பிரசாந்த பீரிஸ் என்பவர் மணற்காட்டு பகுதியில் 168 வீடுகளையும், பொற்பதிப்பகுதியில் 'வேள்ட்விசன்' 100 வீடுகளையும், செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் 267 வீடுகளையும், உடுத்துறைப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 520 வீடுகளையும், ஆழியவளைப் பகுதியில் லயன்ஸ் கழகம் 136 வீடுகளையும், மூள்ளியான் பகுதியில் 270 வீடுகளும், நாகர் கோவில் பகுதியில் 'வேள்ட்விசன்' 26 வீடுகளையும், தாளையடிப்பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 152 வீடுகளையும், எச். ஆர் என்ற நிறுவனம் 100 வீடுகளையும், வத்திராயனில் கியுமெடிக்கா 160 வீடுகளையும், ஆழியவளைப் பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 220 வீடுகளையும், வெற்றிலைகேணிப் பகுதியில் 'வேள்ட்விசன்' 206 வீடுகளையும், சுண்டிக்குளம் பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் 46 வீடுகளையும் அமைத்துக்கொடுக்கவுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதே வேளை நகர அபிவிருத்தி அமைச்சு யாழ். மாவட்டத்தில் 1911 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைமைத்துவ பயிற்சியும் புலமைப்பரிசில் வழங்கலும்

(சுதுமலை)

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சியும் புலமைப் பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளை காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்திரு சி.ஜி. ஜெயக்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளார். (91)

## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் அம்மன் வீதியில் 28 பரப்பு காணியும், பயன்தரும் மரங்களுடன் இரண்டு பெரிய வீடுகளும் கிணறு தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. முழுதாகவும், பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி S. மகேந்திரன், அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
T.P - 0602212952, 0712303732, 0714120616, 0777-732558. (1130)

• • • • • • • • • • • • • • • • •

கோண்டாவில் மேற்கில் (1½) ஒன்றரைப்பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சி. சுந்தரலிங்கம், கே.கே.எஸ் றோட், உப்புமடம். (1129)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமலஹாசன்,
மனிசா கொய்ராலா
நடித்த
**மும்பை xபிரஸ்**
(சி-3980)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**மனோகரா** திரையரங்கு யாழ்ப்பாணம்
சித்திரைப் புத்தாண்டு வெளியீடாக
இளைய தளபதி விஜய்,
போய்ஸ் புகழ் ஜெனிலியா.
காட்சி நேரம் : (பு.நே)
10.30, 2.30,
6.30, 9.30
விசேட காட்சிகளும்
உண்டு
**சச்சின்**
ரிக்கெட் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.



**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
தினசரி 5 காட்சிகள் (பு.நே.)
11.00, 3.00,7.00
இரவு விசேட காட்சியாக
10.00, இரவு 1.30
புதுவருட பிரமாண்ட
வெளியீடு
சுப்பஸ்ரார்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு,
ஜோதிகா, வடிவேல், நாசர்
நடிப்பில்
சிவாஜி புரொடெக்ஷனின்
**சந்திரமுகி**
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
(C/3979)



இருபதாவது அகவையைப் பூர்த்தி செய்து தொடர்ந்தும் வீறுநடையுடன்.....

# கலாலயா

## பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்** - சகலவிதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புகள், மாச் சீனி மலர்கள் (Sugar craffing) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
- **கூந்தல் அலங்காரம்** - 20ற்கும் மேற்பட்ட கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- **FABRIC - PAINTING** - கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணம் தீட்டல், Emboss Painting, Pot Painting, மண் Painting.
- **உணவு தயாரித்தல்** - மேலத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- **கைவேலை** - கடதாசி அலங்காரம், கழிவுத்துணி வேலை ,கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன் வேலை.

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

இத்துடன் அடிப்படை Facial அழகுக் கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.

**6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்.**

**தையல் பயிற்சி** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.
**பூவேலை** - கடதாசியினாலும் துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் Bouquet செய்தல்.

சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம் - 24.04.2005
கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம் - 25.04.2005

**மேலதிக விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை அறிந்து கொள்ளலாம்.** -இயக்குநர்

(c/4057)

CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Program Assistant

Within the framework of the **Children Program** HUDEC needs a program assistant. The Children program will be implemented in coordination with Hudec relief operation for tsunami disaster.

**Job Summary**

The Program Assistant will work closely with the program Manager during the assessment, the formulation and the implementation of the Children Program to be set up under the direction of Hudec / caritas strategy.

**Requirements**

- Working knowledge of English
- Good communication skills
- Experience to work in a social environment
- A clear and creative mind
- Good team player
- Computer skills (word, excel, internet…)
- Good Analytical skills
- Notions of local social – cultural context
- Wiling to travel extensively

*Please send your application by the 22nd of April to the director of Caritas – Hudec:*

***Father Jeyakumar***
***Caritas – Hudec Jaffna***
***14, Mathew's Road, Deougu Street,***
***Jaffna.***

(124)

PLEASE SPECIFY THE POST YOU ARE APPLY FOR IN YOUR APPLICATION.

# பொலநறுவை மாவட்டத்தில் கருணாகுழு அட்டகாசம்!

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தின் அரலகன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிவில், மலியதேவபுர மற்றும் நாமல்பொகுன ஆகிய கிராமங்களில் கருணாவின் பெயரில் இயங்கும் ஆயுதக் குழுவினர் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளதாகச் சிங்களப்பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

மலியதேவபுர மற்றும் நாமல் பொகுன ஆகிய சிங்களக் கிராமங்களில், 121 குடும்பங்கள் வசிக்கின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுத் தமிழ்க் கிராமமான சொறிவிலில் - 246 குடும்பங்கள் வசித்து வருகின்றன. திம்புலாகல விகாரைக்குச் செல்லும் பாதையின் தென்பகுதியிலேயே இந்த மூன்று கிராமங்களும் அமைந்துள்ளன.

கடந்த 11 ஆம் திகதி சொறிவில் கிராமத்தில், கருணா குழுவினரால் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த மூன்று கிராமங்களிலும், பொருளாதாரப் பிரச்சினை உள்ளவர்கள் - சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபடலாம் என அறிவித்த இந்தக் குழு, சிறுபிள்ளைகள் இருக்கும் வீடுகளுக்குத் திருட்டுத் தனமாக மின்சாரம் எடுப்பது தொடர்பாகவும், இதர ஐந்து விடயங்கள் தொடர்பாக கதைத்ததாகவும் தெரியவருகிறது.

இராணுவத்தின் நடமாட்டம் அதிகமுள்ள இந்தக் கிராமத்தில் இடம்பெற்று இந்தக் கூட்டத்துக்கு, அனைவரும் கட்டாயம் வரவேண்டும் எனவும் அவ்வாறு வராதவிடத்து ஒரு குடும்பத்திடமிருந்து ஆயிரத்து 500 ரூபா அபராதம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் கிராம வாசிகள் தெரிவித்துள்ளார்.

ரி - 56 ரக துப்பாக்கி வைத்திருந்த 7 பேரே கூட்டத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து இராணுவத்திடம் கேட்கப்பட்டபோது அவ்வாறு எந்தவித முறைப்பாடும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா இரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் இந்த மூன்று கிராமங்களும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவ்வாறு இடம் பெற சாத்தியம் இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், கருணாவின் பெயரில் இயங்கும் ஆயுதக்குழுவைச் சேர்ந்த சிலர் இந்தப் பிரதேசங்களில் பதுங்கு குழிகளை அமைக்க முயற்சித்ததாகவும், தற்போதைய நிலைகருதி அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால், அவர்கள் அந்த முயற்சியைக் கைவிட்டுச் சென்றதாகவும் பெயர் வெளியிட விரும்பாத பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (01)

# சட்டவிரோத மின்சாரத்தால் 393 மில்லியன் ரூபா நட்டம்!

(கொழும்பு)

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதால் இலங்கை மின்சாரசபைக்கு வருடம் ஒன்றுக்கு 393 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகச் சபைத் தலைவர் ரஞ்ஜித் பொன்சேகா தெரிவித்தார்.

சட்டவிரோத மின்பாவனையாளர் நாட்டில் அதிகரித்துள்ள மாகாணங்களில் வட - கிழக்கு மற்றும் வட - மத்திய மாகாணங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, திருகோணமலை மாவட்டத்தில் 14.8 சதவீதமும், மட்டக்களப்பில் 21 சதவீதமும், வடக்கில் 13.6 சதவீதமும் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவித்த ரஞ்சித் பொன்சேகா - சட்டவிரோத மின்பாவனையாளரிடம் அறிவிடப்பட்ட அபராதம் மூலம் கடந்த நவம்பர் மாதம் மட்டும் ஆறு மில்லியன் ரூபா மின்சார சபைக்குக் கிடைத்துள்ள தாகவும் தெரிவித்தார்.

# கிழக்குப் பகுதியில் படையினர் குவிப்பு!

கிழக்கில் தொடர்ந்துவரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து அங்கு பெருமளவான படையினர் மேலதிகமாக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கிழக்கில் படையினரின் கெடுபிடிகள் அண்மை நாட்களில் அதிகரித்துள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண படை நிலைகளில் அதிகளவில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வீதிச் சோதனைகளும், ரோந்து நடவடிக்கைகளும் கிழக்கில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

படையினரின் இந்த நடவடிக்கையானது - யுத்த சூழல் ஒன்றை அங்கு தோற்றுவித்திருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# தியாகப் பெற்றோரின் கீழ் ஆதரவற்ற சிறுவர்கள்!

(கொழும்பு)

சுனாமியால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை தியாகப் பெற்றோர் முறையின் கீழ் ஒப்படைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் இதற்கான பொறுப்பை ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை - பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளை எஞ்சியுள்ளோரால் வளர்க்க முடி யாத நிலை ஏற்படும்போது, அந்தக் குழந்தைகளையும் தத்தெடுக்க விரும்புவோருக்கு வழங்க அதிகாரசபை முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பாக நீதியமைச்சு புதிய சட்டம் ஒன்றை இயற்றவிருக்கிறது.

# மத்திய கிழக்குக்குச் செல்லும் பணிப்பெண்களுக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாகச் செல்லும் பெண்களுக்கு மாதாந்தம் ஆகக்குறைந்த சம்பளமாக 15 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்படும் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு முகவர் நிலையங்களுக்கும், தொழில் அமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே இதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்தர்ப்பங்களின்போது, வெளிநாடுகளில் பணிபுரியும் பணிப்பெண்களுக்கு கடந்த 5 வருடங்களுக்கு மேலாகச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. எனவே பணிப்பெண்களுக்கு மாதாந்தம் ஆகக் குறைந்த சம்பளமாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை. எனவே அவர்களது சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என தொழில் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்தே ஜூன் மாதம் முதல் 15 ஆயிரம் ரூபா ஆகக் குறைந்த சம்பளமாக வழங்குவதற்கு வேலை வாய்ப்பு நிலையங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. (01)

# இலங்கைப் பெண்ணை அடைத்து வைத்திருந்த அமெரிக்கத் தம்பதியினருக்குச் சிறைத்தண்டனை

சட்டவிரோத குடியேற்றவாசியான பெண் ஒருவரை வேலையாளாக வைத்திருந்து - அவருக்கு சம்பளமோ, உரிய வசதிகளோ வழங்காததற்காக அமெரிக்கத் தம்பதிகளுக்கு சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

சந்திரா பலவந்த என்ற இலங்கைப் பெண் - உரிய ஆவணங்கள் எதுவுமின்றி, 2002 ஏப்ரல் மாதம் முதல் 2004 பெப்ரவரி மாதம் வரை நியுஜெர்சி மாநிலத்திலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தார். அவரை வீட்டு உரிமையாளர்களான மகெர் ஜிசி (வயது - 45) மானெல் ஜிசி (வயது 36) ஆகியோர் வேலைக்கு அமர்த்தி தங்குமிடம் கொடுத்தனர்.

ஆனால் இலங்கைப் பெண்ணுக்கு இந்தத் தம்பதிகள் - சம்பளமோ விடுமுறைக்கான எந்த அன்பளிப்போ வழங்கவில்லை என்பதுடன் அவரை வீட்டுக்கு வெளியில் செல்லவோ, கடிதங்களை அனுப்பவோ அனுமதிக்கவில்லை.

அத்துடன் இலங்கைப் பெண்ணை அமெரிக்கத் தம்பதிகள் கொலை செய்யத் திட்டமிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் 2004 பெப்ரவரியில் சந்திரா பலவந்த தப்பி ஓடி பொலிஸாருக்குத் தகவல்கொடுத்தார்.

உடனடியாகப் பொலிஸார் அவரை மீட்டனர். இதன் பின்னர் அமெரிக்கத் தம்பதிகள் மீது இலங்கைப் பெண் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இதன் அடிப்படையிலும் சட்டவிரோத குடியேற்ற வாசி ஒருவரை இரகசியமாக மறைத்து வைத் திருந்த குற்றத்துக்காகவும் அமெரிக்காவில் சமஷ்டி நிதிமன்றில் அமெரிக்கத் தம்பதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் மீதான கிரிமினல் குற்றச்சாட்டுக்களுக்காக - மகெர் ஜிசிக்கு 10 வருட சிறைத்தண்டனையும், 2 லட்சத்து 50 ஆயிரம் டொலர் அபராதத்தையும் விதித்ததுடன் இவரது மனைவியான மானெல் ஜிசிக்கு 3 வருடச் சிறைத் தண்டனையுடனும், 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவர்கள் ஜூன் 22 ஆம் திகதி முதல் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் நியு ஜெர்சி சமஷ்டி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



கொழும்பு பூபாலசிங்கம் நினைவு மண்டபத்தில் - கலாநிதி க.குணராஜாவின் 'சுனாமி' அறிவியல்சார் விபரண நூல்வெளியீடு செய்யப்பட்டபோது, அதன் பிரதியை கம்பவாரிதி ஜெயராஜ் - பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் சிறிதர்சிங்கிடமிருந்து வாங்குவதையும், நூலாசிரியர் டொமினிக் ஜீவாவையும் படத்தில் காணலாம்.

# நோர்வே தூதுவர் சொல்ஹெய்ம் ஞாயிறன்று இலங்கை வருகிறார்!



(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு குறித்து ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் எரிக் சொல் ஹெய்ம் கலந்துரையாடுவார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புத்தளத்துக்குப் பயணம் செய்யும் எரிக்சொல்ஹெய்ம் - அங்கு இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

19 ஆம் திகதி மட்டக்களப்புக்குச் செல்லும் எரிக்சொல்ஹெய்ம் - தற்போதைய பாதுகாப்பு நிலவரம் மற்றும் சுனாமி விளைவுகள், மீளமைப்புகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் எரிக்சொல்ஹெய்ம் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின்போது அரசியல் நிலைமைகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்று நோர்வேத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வி.ரி.சிவலிங்கம் தலைமையில் மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக - யாழ். மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.இராஜதேவன் அறிவித்துள்ளார். (58)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்; ஐ.தே.கவிலிருந்து வருவோருக்கும் இடம்!

(கொழும்பு)

அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துடன் முரண்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஆளும் தரப்புடன் இணையவுள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.


இவர்களுக்கு அமைச்சரவையில் இடம் வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பியும் விட்டுக் கொடுப்புடன் செயற்படத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மேல் கொத்மலை திட்டம் தொடர்பாகத் தொழிலாளர் காங்கிரஸ் வழங்கிய ஆலோசனைகளை ஜப்பானிய நிறுவனம் நிராகரித்துள்ளது.

இத்தனையடுத்து ஆறு நீர் வீழ்ச்சிகளை அழித்து, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டத்தை, நடை முறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுமானால், மலையக மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதோடு, இயற்கை நீர்வீழ்ச்சிகளும் அழிக்கப்படும் என்றும், இது தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் நலன்களைப் பெருமளவு பாதிக்கும் என்பதால், அரசாங்கத்தில் இருந்து விலகுவதைத் தவிர அதற்கு வேறு மார்க்கம் கிடையாது என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (01)

# அப்ரிடியின் அதிரடி ஆட்டம்: இந்திய அணி பரிதாப தோல்வி!



(கான்பூர்)


சாஹிட் அப்ரிடியின் அதிரடி விளாசலின் மூலம் கான்பூரில் நேற்று நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி அபார வெற்றிபெற்றது.

இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையேயான 5ஆவது ஒருநாள் போட்டி கான்பூர் கிரீன்பார்க் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்திய அணியில் 3 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. கங்கூலிக்குப் பதிலாக தினேஷ் மொங்கியா சேர்க்கப்பட்டார். ஆசிஷ் நெஹ்ரா, முரளி கார்த்திக் ஆகியோர் நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

பாகிஸ்தான் அணியில் 2 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. காயமடைந்த மொகமட் சமி, டனேஸ் கனேரியா ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக இப்திகார் அஞ்சும், அர்ஷத் கான் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

கங்கூலி விளையாடாததால் ராவிட் கப்டனாகப் பணியாற்றினார். நாணயச் சுழற்சியில் வென்ற ராவிட் தனது அணி முதலில் துடுப்பெடுத்




தாடுமென அறிவித்தார். தொடக்க வீரர்களாக டெண்டுல்கரும், ஷேவாக்கும் களமிறங்கினார்கள்.

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளரான நவீட்-உல்-ஹசனின் அபாரமான பந்துவீச்சால் இந்திய அணி திணறியது. 7 ஓவரில் 26 ஓட்டங்களை எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது. டெண்டுல்கர் 1, ஷேவாக் 5, டோனி 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இந்த 3 விக்கெட்டையும் நவீட்-உல்-ஹசன் கைப்பற்றினார்.

4ஆவது விக்கெட்டான கப்டன் ராவிட்-யுவராஜ் சிங் ஜோடி விக்கெட் சரிவை சிறிது நேரம் தடுத்து நிறுத்தியது. 16.2ஆவது ஓவரில் ஸ்கோர் 59ஆக இருந்தபோது 4ஆவது விக்கெட் விழுந்தது. யுவராஜ் 18 ஓட்டங்களில் ரசாக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

5ஆவது விக்கெட்டுக்கு ராவிட்டுடன், மொகமட் கைவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.

இருவரும் சிறப்பாக ஆடி 50 ஓட்டங்களைத் தொட்டனர். கைவ் 64 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களை எடுத்தார். இது அவரது 11ஆவது அரைச்சதமாகும். அவரைத் தொடர்ந்து ராவிட் 84 பந்துகளில் 5



பவுண்டரிகளுடன் அரைச்சதமடித்தார். இது அவரது 58ஆவது அரைச்சதமாகும்.

35ஆவது ஓவருக்குப் பின்பு இருவரும் அடித்து ஆட ஆரம்பித்தனர். குறிப்பாக கைவ் ஓட்டவேகத்தை அதிகரிக்கும் வகையில் சிறப்பாக ஆடினார். 42.3ஆவது ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. ரசாக்கின் பந்தில் ஹபிசிடம் பிடிகொடுத்து கைவ் ஆட்டமிழந்தார்.

6ஆவது விக்கெட்டுக்கு ராவிட்டுடன், தினேஷ் மொங்கியா ஜோடி சேர்ந்தார். அவர் தொடக்கத்தில் ஓட்டங்களை எடுக்க சிரமப்பட்டார்.

அர்ஷத் கான் வீசிய ஆட்டத்தின் 47ஆவது ஓவரில் தினேஷ் மொங்கியா அதிரடியாக ஆடினார். அவர் 2 சிக்ஸர்களை அடித்தார். அந்த ஓவரில் 15 ஓட்டங்கள் கிடைத்தது. ஆட்டத்தின் இறுதியில் ராவிட் 115 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 86 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட்டானார்.

இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 249 ஓட்டங்களை எடுத்தது. தினேஷ் மொங்கியா 28 பந்துகளில் 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியது. அப்ரிடி அதிரடியாக ஆடினார். பாலாஜி, கும்ளே



ஆகியோர் பந்துகளை அவர் அடித்து நொறுக்கினார். 20 பந்துகளைச் சந்தித்து அப்ரிடி 50 ஓட்டங்களைத் தொட்டார். இதில் 5 பவுண்டரிகளும், 5 சிக்ஸர்களும் அடங்கும். அப்போது அந்த அணியின் ஸ்கோர் 7.2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களாக இருந்தது.

தொடர்ந்து அதிரடியாக ஆடிய அப்ரிடி 45 பந்துகளில் சதமடித்தார். இந்த சதத்தில் 10 பவுண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்கள் அடங்கும். அப்ரிடி 46 பந்துகளைச் சந்தித்து 102 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, ஹர்பஜன் சிங்கின் பந்தில் போல்டானார்.

அவருடன் இணைந்து விளையாடிய சல்மான் பட் 21 ஓட்டங்களை எடுத்த நிலையில் கும்ளேயின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். சொகைப் மலிக் -யுகானா ஜோடி சேர்ந்து நிதானமாக ஆடிய வேளை 24 ஓட்டங்களை எடுத்த நிலையில் யுகானா கும்ளேயின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் கப்டன் இன்சமாம் களமிறங்கினார். நன்றாக ஆடிக்கொண்டிருந்த சொகைப் மலிக் 41 ஓட்டங்களை எடுத்தநிலையில் டெண்டுல்கரின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து யுனுஸ்கான் களமிறங்கினார். அவர் 24 ஓட்டங்களை எடுத்து ஷேவாக்கின் பந்தில் போல்டானார்.

பின்னர் இன்சமாம் – ரசாக் ஜோடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. முடிவில் பாகிஸ்தான் 42.1 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்து 5



விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


ஆட்டநாயகனாக அதிரடியாகச் சதமடித்த அப்ரிடி தெரிவானார். 6 போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இறுதிப் போட்டி நாளை டெல்கியில் நடைபெறும்.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.றொக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றியல்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

## மூன்றாம் சுற்றில் ரோஜர் பெடரர்!



மொனாக்கோவில் நடைபெற்ற மொண்டி கார்லோ ஓபன் ரெனிஸ் போட்டியில், சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் ஸ்பெயின் வீரர் ஆல்பர்ட் மான்டெனசை வீழ்த்தினார். இதன் மூலம் இவர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

விளையாட்டு

### பல்கலைக்கழக கிண்ண கிரிக்கெட்

## பல்கலை - பற்றீசியன் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தெரிவாகின!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் நான்முனை கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் மூன்றாம் சுற்று ஆட்டம் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்றபோது - யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 28.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சதீஸ் கண்ணா ஆட்டமிழக்காமல் 27, பார்த்தீபன், விஜயகர்ணன், சுஜீவன், துஷ்யந்தன் ஆகியோர் முறையே 14. 11, 11, 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணியின் சார்பில் ஜெயந்தன், அருள்ராஜ், செந்தூரன், சர்வானந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜதார்த்தன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 6 விக்கெட் இழப்புக்கு குறிப்பிட்ட ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ஜதார்த்தன் 36, அருள்ராஜ் ஆட்டமிழக்காமல் 22, கௌரிபாகன் 18, ரஜீபன் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிருஷ்ணசந்திரா 4, ரஜித், சுஜீவன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

புதன்கிழமை மாலை பற்றீசியன் விளையாட்டுக் கழகத்திற்கும் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பற்றீசியன் அணி 25 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது மழை குறுக்கிட்டமையால் போட்டி கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்த முடிவுகளின் அடிப்படையில் இறுதியாட்டத்துக்கு யாழ்.பல்கலைக் கழக அணியும், பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

இதன்படி யாழ்.பல்கலைக்கழக அணி 9, பற்றீசியன் விளையாட்டுக் கழகம் 8, சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 7 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன. யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எந்தப் புள்ளியையும் பெறவில்லை.

முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் தகுதியைப் பெற்ற அதே நேரம், 3ஆம் இடத்தைப் பெற்ற சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் அடுத்த வருடம் நடைபெறும் சுற்றுப் போட்டியில் பங்குபற்றக்கூடிய தகுதியைப் பெற்றுள்ளது.

புள்ளிகள் எதனையும் பெறாத யங்ஸ்ரார் அணி அடுத்த வருடம் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இழந்துள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (58)

## பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் இறுதிப் போட்டிகள்!

### இன்றும் நாளையும் நடைபெறுகின்றன

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வலிகாமம், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து வலயங்களிலும் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான யாழ்.மாவட்டமட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும், நாளையும் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலும், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

20 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் குழு ஏ இல் நாவற்குழி மகாவித்தியாலயம், நயினாதீவு கணேசா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மற்றும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் என்பனவும்,

குழு பி இல் கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் வேலணை மத்திய மகாவித்தியாலயம் என்பனவும் பங்குபற்றுகின்றன.

இன்று காலை 8.30 மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயமும், நாவற்குழி மகா வித்தியாலயத்தை எதிர்த்து நயினாதீவு கணேசா வித்தியாலயமும், கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயமும் மோதும் போட்டியில் வெற்றிபெறும் அணியும் மோதவுள்ளன.

இன்று காலை 8.30 மணி முதல் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் -

யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேலணை மத்திய மகாவித்தியாலயமும், கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியும்,

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதும் போட்டியில் வெற்றிபெறும் அணியும் மோதவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியும், இறுதிப் போட்டியும், மூன்றாம் இடத்துக்கான போட்டியும் நாளை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (58)

## மெதுவான பந்துவீச்சுக்கு கப்டன் மட்டும் காரணமா?

### கேள்வி எழுப்புகிறார் ராவிட்



மெதுவாக பந்துவீசியதற்கு கப்டன் கங்கூலி மட்டுமா காரணம் என்று துணைக் கப்டன் ராவிட் கங்கூலிக்கு சார்பாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளிடையே நடைபெற்ற அகமதாபாத் ஒருநாள் போட்டியில் இந்திய அணி மெதுவாக பந்துவீசியது என்கிற புகாரின் பேரில், அதற்கு கப்டன் கங்கூலிதான் பொறுப்பு என்று நடுவர் அறிவித்தார். கங்கூலி அடுத்த 6 போட்டிகளில் ஆடக்கூடாது என்றும் தடைவிதித்தார்.

இந்தத் தடை பற்றி இந்திய அணியின் தற்காலிக கப்டன் ராகுல் ராவிட் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் கான்பூரில் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் கூறியவதாவது -

இந்திய அணி மிகவும் மெதுவாக பந்துவீசியதற்கு கப்டன் கங்கூலியை மட்டும் குற்றம் சொல்வது சரியல்ல. இதற்கு மொத்த அணியும் பொறுப்பு. பந்து வீசுபவர்கள் மட்டுமன்றி களத்தடுப்பு செய்பவர்களும் தாமதத்துக்குக் காரணம். எனவே கப்டனை மட்டும் குற்றம் சொல்லக்கூடாது. இப்படி மெதுவாக பந்து வீசுகிற செயல் இந்திய அணிக்குக் கவலை அளிக்கக்கூடிய விடயமாக உருவெடுத்திருக்கிறது. இதைத் தவிர்க்க அனைத்து வீரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

# துரைத் தாத்தாவும் பார்வதிப் பாட்டியும்






சிறுவர் அரங்கம்

# துருவன்



## கெட்டிக்காரன் என்றாலும்...

ஓட்டப் போட்டி நடக்கிறது
ஓடி வாருங்கள் தோழர்களே!

ஆமை - முயலுடன் பந்தயமாம்
ஆகா ஓட்டப் பந்தயமாம்

பறக்கின்றார் முயல் பறக்கின்றார்
பாய்ந்து பாய்ந்து ஓடுகிறார்

பாவம் ஆமைத் தம்பியரோ
பஞ்சி இன்றி நடக்கின்றார்

பறந்து வந்த முயல் அண்ணர்
பாதி வழியில் ஏன் நின்றார்?

பஞ்சி வந்து விட்டதடா
கொஞ்ச நேரம் தூங்குகிறார்

ஆனால் ஆமைத் தம்பியரோ
அரக்கிக் கொண்ட இருக்கின்றார்

அடிமேல் அடியை வைத்தாலும்
முயலைத் தாண்டி விட்டாரே!

வெற்றிக் கம்பம் தெரிகிறது
விரைவா நடந்து செல்லுகிறார்

விழித்து விட்ட முயலாரும்
வேகமாய்த்தான் ஓடுகிறார்.

கெட்டிக்காரன் என்றாலும்
எட்டிப் பிடிக்க முடியாதே

சுட்டித் தம்பி ஆமை அதோ
தொட்டுவிட்டார் கம்பத்தை

கோட்டை விட்ட முயலார் கூறுகிறார்
தூங்கு மூஞ்சி முயல் நானும்
தோற்றுப் போனேன் தம்பியரே
வாங்கில் படுத்துத் தூங்காது
வடிவாய்ப் படிப்பீர் தம்பியரே

- பா.சத்தியசீலன்



**சிந்தனைக்கு**
கச்சிதமாகத் திட்டமிடுவது பாதி வெற்றி பெற்றதற்குச் சமம்.




## ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.



த.தனுசிகா
தரம் -7
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி



ர.பிரதாபன்
தரம் -7
யா/சுதுமலை சின்மயபாரதி வித்தியாசாலை



மு.யமிலா
தரம் -7
யா/வல்வெட்டி இ.த.க.

# பொது அறிவு

1. புகழ்பெற்ற லியானாடோ டாவின்சி எனும் ஓவியர் "மோனலிசா" எனும் உயிர்த்துடிப்புள்ள ஓவியத்தை வரைந்தார். இதனை வரைந்து முடிக்க மூன்றரை ஆண்டுகள் எடுத்ததாம்.
2. காற்று வீசும் திசைக்கு எதிராகத் தான் இருக்கும் படியாக நாய் படுத்து உறங்கும். ஏனென்றால், மோப்பத்தினால் உணர்ந்து கொள்ளலாம் என்பதற்காக.
3. பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துவார்கள் பெரியோர்கள். அந்தப் பதினாறும் - புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்விதி, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இனிமை, துணிவு, நோயின்மை, நீண்ட ஆயுள்.
4. இளைஞர்களுக்கான ஒரு உலகளாவிய இயக்கம் எது தெரியுமா? 1907 இல் லெப்டினன்ட் ஜெனரல் ரொபோட் பேடன்பவல் எனும் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட சாரணர் இயக்கம் மட்டும்தான்.
5. சிங்கத்தின் குட்டிக்கு புலி, சிறுத்தை முதலியவற்றுக்கு உள்ளதுபோல கோடு, புள்ளிகள் இருக்கும். ஆனால் குட்டிகள் வளரவளர அவை மறைந்துவிடும். ஆம் சிங்கத்தின் வளர்ச்சியின் ஆரம்பமே புலிதான்.

இ.சர்மிளா,
யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.

# உங்கள் கைவண்ணம்



சி.குருபரன்
தரம் - 6
யா/இந்துக்கல்லூரி.



# பட்சி

அன்று ராஜீவின் பிறந்தநாள். பம்பரங்கள் என்ன, குதிரைகள் என்ன, படங்கள் என்ன என்று பலவித பரிசுகள் அவனுக்கு ஏராளமாகக் கிடைத்தன. ஆனால், எல்லாவற்றிலும் விலைமிக்க பரிசை ராஜீவின் மாமா கொடுத்தார்.



அது பட்சிகள் பிடிப்பதற்கான வலை. சட்டத்தில் சிறு பலகை பொருத்தப்பட்டிருந்தது. வலை அதிலிருந்து தொங்கியது. பலகைமேல் தானியங்களை வைத்து, வெளி முற்றத்தில் வைக்க வேண்டும். பட்சி பறந்து வந்து பலகைமேல் அமரும். பலகை கவிழ்ந்துவிடும். வலை தானே மூடிக் கொள்ளும். வலை இந்த விதமாக அமைக்கப்பட்டிருந்தது.


ராஜீவுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. வலையைக் காட்டுவதற்காக அம்மாவிடம் ஓடினான்.

'மோசமான விளையாட்டுச் சாமான் இது. உனக்குப் பட்சிகள் எதற்கு? நீ அவற்றை எதற்காக வதைக்கப் போகிறாய்?' என்றாள் அம்மா.

'நான் அவற்றைக் கூண்டில் வைப்பேன். அவை பாடும். நான் அவற்றுக்கு இரை தருவேன்' என்று சொன்னான் ராஜீ.

அடுத்தநாள் மாலை, ராஜீ தானிய மணிகளை எடுத்து பலகைமேல் தூவி, வலையைத் தோட்டத்தில் வைத்தான். பட்சிகள் அதற்குப் பறந்துவரும் என்று எதிர்பார்த்து நின்றுகொண்டே இருந்தான். ஆனால் பறவைகள் அவனுக்குப் பயந்து, வலையின் பக்கம் வரவில்லை.

ராஜீ வலையை அங்கேயே வைத்து விட்டுச் சாப்பிடப் போனான். சாப்பிட்ட பிறகு வலையை வைத்த இடத்துக்கே மீண்டும் வந்தான். வலை மூடியிருந்தது. வலைக்கு உள்ளே ஒரு பட்சி சிறகடித்துக் கொண்டிருந்தது. ராஜீவுக்கு ஒரே மகிழ்ச்சி. பட்சியைப் பிடித்து வீட்டுக்குக் கொண்டுபோனான்.



'அம்மா! பாருங்கள், நான் குருவியைப் பிடித்துவிட்டேன். இது சிட்டுக் குருவியைப் போல இருக்கிறது! அதன் நெஞ்சு எப்படித் துடிக்கிறது!' என்றான்.

'இது சிட்டுக்குருவிதான். இதைத் துன்பப்படுத்தாதே. விட்டுவிடு', என்று சொன்னாள் அம்மா.

'இல்லை, நான் இதற்கு உணவும், நீரும் கொடுப்பேன்' என்றான் ராஜீ.

ராஜீ, சிட்டுக்குருவியைக் கூண்டில் வைத்து, இரண்டு நாட்கள் அதற்குத் தானியம் போடுவதும், தண்ணீர் விட்டு வைப்பதும், கூண்டைச் சுத்தப்படுத்துவதுமாக இருந்தான். மூன்றாம் நாள் பட்சியைப் பற்றி மறந்தே போனான். அதற்கு உணவும் வைக்கவில்லை, தண்ணீரும் மாற்றவில்லை.

'பார்த்தாயா! உன் சிட்டுக்குருவியை மறந்துவிட்டாய். நீ அதை விட்டு விடுவதே மேல்' என்று அம்மா சொன்னாள்.

'இல்லை, நான் மறக்க மாட்டேன். இதோ தண்ணீர் ஊற்றி வைக்கிறேன். கூண்டைத் துப்புரவு செய்கிறேன்...' இப்படிச் சொல்லியவாறு, ராஜீ கூண்டுக்குள் கையை விட்டு அதைத் துப்புரவு செய்யலானான்.

சிட்டுக்குருவி பயந்துபோய், கூண்டுக்குள் சிறகுகளைப் படபடத்து மோதிக்கொண்டது. ராஜீ கூண்டைச் சுத்தம் செய்துவிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்றான். அவன் கூண்டை மூட மறந்து விட்டதைத் தாயார் கவனித்து விட்டாள்.

'ராஜீ, கூண்டை மூடு. இல்லாவிட்டால் உன்னுடைய சிட்டுக் குருவி வெளியே பறந்து மோதிச் சாகப்போகிறது! என்று கத்தினாள்.

அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் சிட்டுக்குருவி திறந்த கதவைக் கண்டுகொண்டது. ஆனந்தம் அடைந்து, சிறகுகளை விரித்து அறை வழியாக ஜன்னலை நோக்கிப் பறந்தது. ஜன்னல் கண்ணாடிகளைக் கவனிக்காமல், கண்ணாடிமேல் மோதி ஜன்னல் திறாங்கின் மேல் விழுந்தது.



ராஜீ ஓடிவந்தான். சிட்டுக் குருவியை எடுத்து அதைக் கூண்டுக்குள் விட்டான். குருவி இன்னும் உயிரோடு இருந்தது. ஆனால் விரித்த சிறகுகளுடன் குப்புறப் படுத்து, சிரமத்துடன் மூச்சுவிட்டது. ராஜீ பார்த்தான், பார்த்து அழ ஆரம்பித்தான்.

'அம்மா! இப்போது நான் என்ன செய்வது!' என்றான்.

'இப்போது ஒன்றுமே செய்வதற்கில்லை' - என்றாள் அம்மா.

ராஜீ நாள் முழுவதும் கூண்டைவிட்டு அகலாமல் குருவியையே பார்த்துக் கொண்டிருந்தான். சிட்டுக்குருவியோ முன் போலவே குப்புறக் கிடந்தது, சிரமத்துடன் மூச்சுவிட்டது. பின்னர் ராஜீ படுக்கப் போனான். வெகு நேரம்வரை ராஜீவால் நித்திரை கொள்ளமுடியவில்லை. அவன் கண்களை மூடியபோதெல்லாம் குப்புற விழுந்து மூச்சுத்திணறும் குருவியே அவனுக்குக் காட்சி தந்தது.

காலையில் ராஜீ கூண்டின் பக்கம் போனான். சிட்டுக்குருவி அமைதியாக அமர்ந்திருந்தது. ராஜீ கூண்டின் அருகே சென்றான். கூட்டைத் தூக்கிக் கொண்டுபோய், வெளியில் வைத்தான். கூண்டின் கதவைத் திறந்துவிட்டான். சிட்டுக்குருவி வெளியே பறந்துபோனது.

அதுமுதல் ராஜீ பட்சிகளைப் பிடிப்பதே இல்லை.

# மூளைக்கு வேலை

0,1,2,6,7,8 ஆகிய எண்களைப்பயன்படுத்தி இந்தக் கட்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள். ஆனால் எந்தப் பக்கத்தைக் கூட்டினாலும் 12 வருமாறு உங்களால் செய்ய முடியுமா?

| | | |
|---|---|---|
| | | 5 |
| | 4 | |
| 3 | | |

## சிவலிங்கமும், மயூரனும்

சிவலிங்கம் மயூரனுக்கு 100 மான் பொம்மைகள் செய்து தருவதாக ஒப்புக் கொண்டார். இந்தப் பொம்மைகளில் ஆண் மான், பெண் மான், குட்டிமான் பொம்மைகள் அடங் குகின்றன.

ஆனால் மயூரன் ஆண்மான் பொம்மைகளை விட, பெண் மான் பொம்மைகளின் எண்ணிக்கை 4பங்கு அதிகமாகவும், பெண் மான் பொம்மைகளை விடவும். குட்டிமான் பொம்மைகளின் எண்ணிக்கை 5 பங்கு எண்ணிக்கை அதிகமாகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான்.

ஒவ்வொரு ரகத்திலும் எத்தனை பொம்மைகள்செய்ய வேண்டும்?

### சென்றவார விடைகள்

8. மேலே உள்ள எண்ணை 7 ஆல் வகுத்தால் கீழே உள்ள எண் வரும்.

## ஒவ்வொரு உயிரினத்துடனும் தொடர்புடைய விடயத்தை இணையுங்கள். எது தனியாக உள்ளது ?



# பழமொழிகள்

1. அடாது செய்பவர் படாது படுவர்.
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
3. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
4. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
5. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
6. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
7. காக்கைக்கும் தன் குஞ்சுபொன் குஞ்சு.
8. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
9. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
10. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்.

க.ஸ்ரீதரன்
தரம் – ൭
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்

## நாடுகளும், நாணயங்களும்

| | | |
|---|---|---|
| ✻ இலங்கை | - | ரூபா |
| ✻ இந்தியா | - | ரூபா |
| ✻ ஜேர்மன் | - | யூரோ |
| ✻ பாகிஸ்தான் | - | ரூபா |
| ✻ ஜப்பான் | - | யென் |
| ✻ அமெரிக்கா | - | டொலர் |
| ✻ பிரான்ஸ் | - | யூரோ |

## விடுகதைகளும் விடைகளும்

1. தலையில் மோதிப் பல்லை உடைப்பான் அவன் யார்?
2. வெள்ளை றோட்டில் கறுத்தக் கார் ஓடுது அது என்ன?
3. அம்மா வைத்த தட்டில் நீர் விட்டால் நிக்காது?
4. அம்மா வாங்கி வந்த பசுவுக்கு வயிற்றிலே கொம்பு?
5. உச்சிக் கொப்பிலே உலக்கை தூங்குது அது என்ன?

அ.பிரசன்னா
தரம் – ൭
உடுப்பிட்டி
அமெரிக்கன்மிஷன்
கல்லூரி.

### விடைகள்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு

### கண்கட்டி வித்தை



அறையின் ஒரு பக்கச் சுவரின் நடுப் பகுதியில் ஒருவரை நிறுத்தி வைக்க வேண்டும். அதற்கு எதிரே உள்ள சுவர்ப் பக்கமாக மற்றவர்கள் வரிசையாக நிற்க வேண்டும்.

தனியே நிற்பவர் யார் யார் எங்கே நிற்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனித்துக்கொள்ள வேண்டும். பிறகு அவரது கண்ணை ஒரு துணியால் நன்றாகக் கண் தெரியாதபடி கட்டிவிட வேண்டும்.


கண் கட்டப்பட்ட பின்னர், அவர் இருக்கும் இடத்திலேயே அவரை ஒருமுறை சுற்றிவிட்டு விட்டால், அவருக்குத் தான் எந்தப் பக்கம் திரும்பி நிற்கிறோம் என்பதைச் சரியாகக் கணிக்க முடியாமல் போய்விடும்.

அதன் பின்னர் அவரைச் சுவர் ஓரமாக நிற்பவர்களை நோக்கி நடந்து போகுமாறு கூறவேண்டும். அவ்வாறு சென்று, யாரையாவது அவர் தொடும்படி சொல்ல வேண்டும். தொட்டவரின் தலைமுடி முகம் சட்டை கை இவைகளைத் தொட்டுணர்ந்து யார் என்று கூறிவிட வேண்டும்.

சரியாகச் சொல்லிவிட்டால், தொடப்பட்டவர் கண்களைக் கட்டிக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் சொல்லத் தவறியவரே மீண்டும் கண்கட்டப்பட்டு, ஆட்டத்தைத் தொடரவேண்டும்.

சுவர் ஓரத்தில் நிற்கும் மற்ற மாணவர்கள் கதைப்பதோ, அசைவதோ கூடாது. அவ்விதம் செய்தால் கண்கட்டப்பட்டவர் சத்தத்தை வைத்து, எந்தப் பக்கம் யார் நிற்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து விடுவார். பழகிய குரலாக இருந்தால் அவரை நோக்கி வந்து தொட்டுச் சரியாகச் சொல்லிவிடக்கூடும்.

## க்ரே ஃபிஷ்
## CRAY FISH



கடல் நண்டு போன்ற இந்த இனம் நல்ல தண்ணீரில் வாழும். கடின ஓடு உள்ள ஒரு நீர்வாழ் பிராணி. நன்கு வளர்ந்த வயிறும் இடுக்கி போன்று செயற்படும் இரு முன்னங்கால்களும் கொண்டது.

இவற்றில் பல வகைகள் உண்டு. எல்லாமே உணவுக்காக வியாபார ரீதியில் பெரிய அளவில் பிடித்துக் கொல்லப்படுகின்றன.

# விலங்குகளின் பாடசாலையில் ஒருநாள்...

மிருகங்களின் பாடசாலையில், விமலா யானை ஆசிரியராகக் கடமை புரிகின்றார். ஒரு நாள் தனது வகுப்பு மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சை வைத்தார்.

சிறிது நேரத்தில் மாணவர்கள் தமது விடைத்தாள்களை ஆசிரியரின் மேசையில் வைத்தார்கள்.

எழுத்துப் பரீட்சையில் தனது மாணவர்கள் எடுத்த சராசரியைக் கணிப்பிட வேண்டும் என்று, விமலா ஆசிரியருக்கு ஒரு யோசனை உதித்தது.


சராசரியைக் கண்டுபிடிக்க, முதலில் வகுப்பு மாணவர்கள் எடுத்த புள்ளியைக் கூட்டினார்.

75
63
25
61
52
48
324




1. 324 இன் சராசரியைக் காண எந்த எண்ணால் பிரிக்க வேண்டும்?
2. வகுப்பு மாணவர்களின் சராசரி ........................ ?
3. வகுப்பு மாணவர்களின் சராசரியை 9 ஆல் வகுத்தால் விடை ........................ ?
4. 3 இன் வர்க்க மூலம் என்ன?


குருவி புழுவைக் கண்டுபிடிக்க வழிகாட்டுங்கள்












## இடமிருந்து வலம்

1. சிரிக்க வைக்கும் கோமாளிச் செயல்கள்.
6. மறுப்பது என்றும் சொல்லலாம்.
10. நான்கு வகையான தமிழ்ச் செய்யுள்களுள் ஒன்று.
11. வளைவு (குழம்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

1. நூலின் பிரிவுகள்.
3. சோறு சமைக்கப் பயன்படும் பாத்திரம்.
5. நடிப்பதற்காகப் போடுவது (குழம்பியுள்ளது)

## கீழிருந்து மேல்

2. நீண்ட சதுரம்.
4. இதில் பன்னிரெண்டு சேர்ந்ததே ஒரு வருடம்.
7. தடித்த ஓட்டினை உடைய பழம்.
8. விளையாட்டு ஒன்றுக்குப் பயன்படும் சதுர அல்லது செவ்வகக் கட்டை.
9. விடிவதற்கு முன், வானில் மிகவும் பிரகாசமாகத் தெரியும்.
12. பூமியைச் சுற்றிக் குறிப்பிட்ட எல்லைவரை அமைந்திருக்கும் காற்றுவெளி.

## வலமிருந்து இடம்

2. ஒரு பூ.
4. முக்கனிகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
9. கிராம சேவகர்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*
*திருக்குறள்*

# நமது நோக்கு

## அதிகரித்துவரும் அழுத்தமும், அரசாங்க தரப்பு அறிவிப்பும்...

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து நான்கு மாதங்கள் முடிவுறும் நிலையிலும் இன்னமும் அந்த வரலாற்றுத் துயரத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் நியாயமான முறையிலும், விரைவான செயற்பாட்டு ரீதியிலும் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மக்கள் நலன சார்ந்த அக்கறையுடன் இயங்காது, அவலத்திலும் அரசியல் அனுகூலங்களைக் குறிவைத்துச் சிந்திப்பதால் ஆட்சியாளர் மீதான நம்பிக்கையானது மக்களிடம் வீழ்ச்சி காணத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக இயற்கைப் பேரழிவுக்குள்ளான வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கான உடனடி - மற்றும் அத்தியாவசிய நிவாரணப் பணிகளைப் பாரபட்சமின்றி மனிதநேயத்துடன் மேற்கொள்ள அரசுக்குள்ளேயே கடும் எதிர்ப்பும், கருத்து முரண்பாடுகளும் நிலவிவருவதால்- சர்வதேச உதவிகள் பெருமளவில் கிடைத்தும், அதன் பயனை மக்கள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளமை உலகறிந்த விடயமாகிவிட்டது.

நிவாரணப் பணிகளை விரைவாகவும், பாரபட்சமின்றியும் மேற்கொள்ள அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு அடிப்படையில் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி இயங்கவைப்பதன் அவசியம் குறித்து சகல மனிதநேய அமைப்புகளாலும், உலக நாடுகளாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதும், அதன் அவசியத்தை உணர்ந்து செயற்பட மனமின்றி அரசியல் உள்நோக்குடன் இன்றுவரை அந்த விடயம் தொடர்பாக எந்தவிதமான உறுதியான முடிவுக்கும் வராது இழுத்தடிப்பைச் செய்துவரும் அரசு- பொதுக் கட்டமைப்புத் தொடர்பான உடன்பாடு இந்தமாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் என சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஊடாகத் தெரிவித்துள்ள தாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த அறிவிப்பும், அதிகரித்துவரும் அரசின் மீதான சர்வதேச அழுத்தம் காரணமாக தவிர்க்கமுடியாத சூழலில் வெளியிடப்பட்டதாகவே அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதான் உண்மையான நிலையும்கூட.

இதற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒரு மாதத்துக்கு அதிக காலமாக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இலங்கை இனவிவகாரம், சமாதான நகர்வுகளின் இன்றைய நிலை அரசாங்கத்தின் தோழமைக் கட்சியான ஜே.வி.பியின் அதிகார மேலாதிக்க சிந்தனையுடன் கூடிய கருத்தியல் முரண்பாடுகளும், பேரினவாத கொள்கை வெறியும், அமைதி முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் சூழல், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மற்றும் பொதுக் கட்டமைப்பு ஆகியவற்றின் உருவாக்க அவசியம் போன்ற சகல விடயங்களின் நிலைப்பாடு குறித்த தெளிவையும் வழங்கிவரும் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரின்அழுத்தமான செயற்பாடும் காரணமாகும். உலகம் இலங்கை விவகாரம் தொடர்பான உண்மையை அறிந்து கொள்ள இந்தப் பயணம் பெரிதும் உதவியுள்ளது எனலாம்.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையரசினதும், லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற அதன் சர்வதேச பிரசாரகர்களினதும் ஒருதலைப்பட்சமான கருத்துக்கட்டலில் உண்மையை அதன் சகல பரிமாணங்களிலும் புரிந்துகொள்ள முடியாதிருந்த சர்வதேச சமூகத்தின் இலங்கைவிவகாரம் - இலங்கையின் ஆட்சித்தலைமைகளின் அணுகுமுறை தொடர்பான கருத்தியல் நிலைப்பாடு பெருமளவிற்கு இப்போது மாற்றம் காணத் தொடங்கியுள்ளதால் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்க ஆரம்பித்துள்ளது.

சர்வதேச அனுசரணை மற்றும் ஆதரவுப்பின்பலத்துடன் ஆரம்பமான அமைதிப்பேச்சுக்களில் அசைவற்ற நிலை ஏற்பட எது காரணம்? சுனாமி நிவாரணப் பணிகள் முழுவீச்சுடன் நடைபெற அவசியமான பொதுக்கட்டமைப்பை உருவாக்கவிடாது தடுக்கும் சக்தி எது என்பதை உலகம் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டது என்பதை அரசும் அச்சத்துடன் உணர்ந்து கொள்ளத்தொடங்கி விட்டது.

அதன் எதிரொலியே பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்பாடு விரைவில் கைச்சாத்திடப்படும் என்ற அரச பக்க அறிவிப்பு என்றே ஆய்வாளர் கருதுகின்றனர்.

அப்படியான ஒரு உடன்பாடு எட்டப்படுமேயானால், அதனை இதுவரைநாளும் எதிர்த்த ஜே.வி.பியினரும் ஏனைய பேரினவாத சமாதான எதிர்ப்புக்குழுக்களும் என்ன செய்யப்போகிறார்கள்?

இந்தக் கட்டமைப்பு தனது பணிகளைச் செய்யவிடாது தடுப்போம் என அடுத்த அறிக்கையை விடுவார்களா?

அரசினதும் அதன் தோழமைக் கட்சிகளினதும் நிலைப்பாடும், செயற்பாடும் இது தொடர்பாக எந்த உறுதியான கொள்கையின் அடிப்படையிலும் இன்னமும் திட்டமிடப்படவில்லை என்பது உண்மையே.

இந்த நிலையில், தமது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அடுத்தவாரமளவில் நாடுதிரும்பும் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரும் குழுவினரும் விரைவில் சில முக்கிய முடிவுகளை எடுப்பார்கள் என்பது திண்ணமாகும்.

அதற்கு முன்னர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஒரு சாதகமான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டிய 'அரசியல் அவசியம்' அரசுக்கு ஏற்பட்டுள்ளதையே அரச தரப்பின் அறிவிப்பு எதிரொலிப்பதாக உள்ளது என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




*செய்தி:-*
இலங்கை சமாதான முயற்சிகளில் அமெரிக்க தலையீடு தவிர்க்கமுடியாததாகி வருகிறது என்பது நோக்கர்கள் கருத்து.

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வெளியூர் வியாபாரிகளும்; உள்ளூர் அரசியல் வியாபாரிகளும்!

வடக்குக்கு வெளியே அதாவது, தென்னிலங்கையிலும், மற்று மிடங்களிலுமிருந்தும் வந்த சிங்கள, இஸ்லாமிய, தமிழ் வியாபாரிகள் ந்தமுறை யாழ்ப்பாணத்து வீதிகளில் புத்தாண்டுக்குக் கடை விரித்தார்கள். கண்ணைப்பறிக்கும் வண்ணங்களில் சேலைகள், துணிகள், சட்டைகள், களிசான்கள், ஜட்டிகள் மற்றும் விதம் விதமான பொருகள் நடைபாதைகளையும் அடைத்துக் கிடந்தன. தொப்பிகளில்தான் எத்தனை விதம், காலணிகளிலும் பலரகம். கடைகளில் விற்பனையானதைவிட நடைபாதைகளில் விலைபோன பொருள்களே அதிகம். வெளியூர்களிலிருந்துவந்த வியாபாரிகளுக்குக் கொண்டாட்டம்தான் என்று என்முன் வந்தமர்ந்த பரமசிவம் சொல்லிக்கொண்டிருந்தார்.

கடைக்காரர்களுக்குக் கொஞ்சம் கோபமாக இருக்குமே என்றேன்.

சிலபேருக்கு முகம் கொஞ்சம் கடுப்பாகத்தானிருந்தது. என்றாலும், நல்லரகம், நம்பிக்கையானவை எங்களிடம் தானிருக்கிறது. வேண்டிய பொருள்களைப் பிடிக்காவிட்டால் இங்கு மாற்றியும் எடுக்கலாமென்று சொல்லி அவர்களும் கெட்டித்தனமாக வியாபாரம் நடத்தினார்கள். இன்று நகைக் கடைகளிலும்கூட பவுண் விலையேறியபோதிலும் வியாபாரம் குறைவில்லை என்றார் பரமசிவம்.

வெளிநாட்டுப் பணம் புரளுது. கொண்டாட்டம் என்றால் வெளிநாடுகளிலுள்ளவர்கள் தங்கள் உறவுகளுக்குப் பணம் அனுப்பத்தானே செய்வார்கள் என்றேன்.

வெளிநாடுகளில் அவர்கள் பனியிலும், குளிரிலும், இரவிலும் பகலிலும் வேலை செய்வதாலும் உடன்பிறப்புக்களுக்கும் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காகப் பணம் அனுப்புவார்கள். தாங்கள் அனுப்பிய பணத்தில் இவர்கள் எப்படி அலங்கரித்துச் சந்தோசமாகக் கொண்டாடுவார்கள் என்பதை அவர்கள் அங்கிருந்து கற்பனை செய்து சந்தோஷப்படுவதிலும் ஒரு சுகம் இருக்கும் என்றார் பரமசிவம்.

வீண் செலவுகளைக் குறைத்து கடற்கோளினாலும், போரினாலும் அனாதையாகிவிட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவி செய்தால் அவர்களைக் கைதூக்கிவிட உதவி செய்தால் அங்கிருந்து பணம் அனுப்புபவர்களுக்குப் பேரானந்தமாக இருக்கும் என்றேன்.

அது உண்மைதான். இதைவிட இங்கு நல்லமுறையில் கட்டப்பட்டிருக்கும் கோவில்களில்இருக்கும் மண்டபங்களை இடித்துவிட்டுப் புதிய கொங்கிரீட் மண்டபங்களையும், மேலும் மேலும் கோபுரங்களையும் கட்டுவதை நிறுத்திப் புதிய தொழிற்சாலைகளையும், இடிந்தும் அழிந்தும் போயுள்ள கல்விக் கூடங்களையும் கட்டுவது சமூகத்துக்குப் பெரும் சேவை செய்வதாக இருக்கும் என்றார் பரமசிவம்.

மீண்டும் போர் விமானங்கள் குண்டுவீசத் தொடங்கினாலும், ஹெலிகள் சுட்டாலும் மக்கள் போய் ஒதுங்கி உயிர் தப்புவதற்காகத்தான் கோயில்களில் கொங்கிரீட் மண்டபங்கள் கட்டுகிறார்களோ என்றேன்.

ஆண்டவன் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையில்தான் ஆண்டவனைப் பாதுகாக்க கோபுரங்களும் மண்டபங்களும் கட்டுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதற்காக அன்னதான மண்டபங்களும் அமைக்கிறார்கள். சிலருக்கு இதனால் பெரும் புகழும் கிடைக்கின்றன என்றார் பரமசிவம்.

எல்லாக் கோயில்களிலும் நல்லூரைப் போல திருவிழாக் காலங்களில் மக்கள் கூடுகிறார்களா? இளைஞர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குப் போய்விட்டதால் சுவாமி காவுவதற்கே சில கோவில்களில் ஆள் தட்டுப்பாடு என்றும் பேசிக்கொள்கிறார்களே என்றேன்.

கோவில் திருவிழா என்றாலே அந்த ஊர், அந்த கிராம மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்படுத்தும் திருவிழா என்றுதான் அர்த்தம். உறவுகளுக்குள்ளேயே மனக்கசப்பு ஏற்பட்டிருப்பவர்கள் திருவிழாவில் ஒன்றுசேர்ந்துவிடுவார்கள். தேர்த் திருவிழா என்றால் ஊர்கூடித் தேர் இழுப்பது என்ற அர்த்தம் தான் என்றார் பரமசிவம்.

இந்த ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றுதானே மக்கள் விரும்புகிறார்கள், வேண்டுகிறார்கள். மக்கள் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டுமென்றுதான் நமது முன்னைய தலைவர்கள், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமை வழங்கும்படி ஆங்கிலேயருக்குப்பின் ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமையிடம் ஜனநாயக முறையில் கேட்டார்கள். பின் இந்த உரிமையைப் பெறுவதற்கு காந்திய வழியில் சாத்வீகமாகப் போராடினார்கள். இச் சமயங்களிலெல்லாம் சிங்கள ஆதிக்க சக்திகள் தமிழ் இனத்தை ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கிப் பின்னர் தமிழினத்தை அழித்தொழிக்கவும் முனைந்தது.

இந்த நிலையில்தான் தங்களையும் பாதுகாத்துத் தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் பாதுகாக்க நமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். வீரப்போர் புரிந்த விடுதலைப் புலிகள் மண்ணில் பெருமளவு இடம்பிடித்து மீதியையும் வெற்றிகொள்வதற்கிருந்த சமயத்தில் காக்கை வன்னியர்களும், எட்டப்பர்களும் எமக்குள் முளைத்துவிட்டனர். மக்கள் சமாதானத்தை அனுபவிக்கவேண்மென்பதற்காக போர்நிறுத்தம் செய்ததால் கோடரிக்காம்புகளும் எட்டப்பர்களும் உருவாவதற்கு வாய்ப்பாகிப் போய்விட்டது. தமிழ் இளைஞர்கள் கைதுசெய்து சித்திரவதை செய்யப்பட்டபோதும் ,கிருஷாந்திகள் பாலியல் கொடுமையின்பின் கொலை செய்யப்பட்டபோதும், கோயில்கள், தேவாலயங்கள், கல்விக் கூடங்கள் குண்டுவீசித் தாக்கப்பட்டபோதும், மகாநாயக்கர்களைச் சந்திக்காத சங்கூதியார்அகதிகளாகிப்போன தமிழ் மக்களுக்கு உதவக்குடாதெனக் கேட்பதற்கு கண்டிக்கு யாத்திரை போகிறார்! கோயில் திருவிழாக்களும் தேர்த்திருவிழாக்களும் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டன என்பது உண்மைதான். பின்னர் திருவிழாக்களை யார் சிறப்பாகச் செய்வது திருவிழா உபயகாரரில் உயர்ந்தவர் யார், தாழ்ந்தவர் யார் என்பதிலும் வாணவேடிக்கை காட்டுவதிலும் திருவிழாவில் போட்டிகள் ஏற்பட்டு ஒற்றுமை குலைந்ததும் உண்டு. கோயில் திருவிழாக்களிலும் காக்கை வன்னியர்களும், எட்டப்பர்களும் நுழைந்திருந்ததெண்டு சொன்னார் பரமசிவம்.

இதேபோல் ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் தேர்தல் திருவிழாக்காலத்தில் சங்கூதிகள்போல் சகுனிகளும் நுழைந்து ஒற்றுமையைக் குலைத்த கதைகளுமிருக்கிறது என்றேன்.

பின்னே, இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு வாக்குறுதியளித்து நாடாளுமன்றம் சென்று சுகம் அனுபவித்தவர் இப்போது மீண்டும் நாடாளுமன்றம் போகக் கிடைக்காததால் நீதிமன்றத் தடை உத்தரவுடன், கூட்டணியின் தலைவர் என்ற முத்திரையுடன் ஒற்றுமைப்பட்ட தமிழினத்தைக் காட்டிக்கொடுத்து இலாபம் பெற அறிக்கைகள் விட்டு ஆலாய்ப் பறக்கின்றார் என்றார் பரமசிவம்.

ஆத்திரமூட்டும் செயல்கள் அதிகரித்துவருகின்றபோதிலும், மக்களின் நலனுக்காகப் போர்நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் கடைப்பிடிப்பதால்தான் புத்தாண்டுக்கு வெளியூர்களைச் சேர்ந்த சிங்கள, இஸ்லாமிய வியாபாரிகளும் இங்குவந்து வியாபாரம் செய்தனர். இவர்கள் சங்கூதியார் சொன்ன "ஜனநாயகம் இல்லாத ஆயுத பலத்தால் ஆட்சி" செய்யப்படும் கிளிநொச்சி ஊடாகத்தான் இங்குவந்தார்கள். போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதால்தான் சங்கூதியார் கண்டி யாத்திரையும் போக முடிகிறது என்றேன்.

சிண்டு முடிபவர்கள் நீண்டநாளைக்கு வெற்றிபெறமுடியாது. விடுதலை முழுமைபெற மக்கள் ஒன்றுதிரண்டால் எட்டப்பர்களும், காக்கைவன்னியர்களும் காணாமல் போய்விடுவார்கள் என்றபடி நடந்தார் பரமசிவம்.

வாரநோக்கு

யாழவன்

# மீண்டும் மீண்டும் சொல்வதால் பொய் உண்மையாகி விடாது

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பது போல பல விடயங்கள் இலங்கை அரசியற் தளத்திலே மீண்டும் மீண்டும் தொடர்ந்த வண்ணமுள் என. ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததான அரசின் நகர்வுகள், விடுதலைப் புலிகளின் உயர்மட் அரசியற் குழுவினரின் ஐரோப்பிய விஜயம் என பல நிகழ்வுகள். இவ்வாறு இருப்பினும், கருணா அணியினரின் செயற்பாடுகளே இன்று பலரது கவனத்தையும் திசைதிருப்புவதாக அமைந்துள்ளது.



பொலநறுவை மாவட்டத்திலே கருணா அணியினரின் முகாம் ஒன்று அமைந்திருப்பதும் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த முகாம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலே அமைந்திருக்க வில்லையென இராணுவ தரப்பு மறுத்துவிட்டது. இதேவேளை இந்த முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் கருணா அணியின் முக்கியஸ்தர் மங்களம் மாஸ்டர் உட்பட மூவர் காயமடைந்தமை, முகாம் அமைந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நடைபெற்று பல நாட்கள் கடந்து விட்ட நிலையிலே கடந்த வாரம் திருகோணமலை மூதூரிலே அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்ததுடன் இன்னொருவர் காயமடைந்துமுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு கருணா அணியினரே முழுப் பொறுப்பு என திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் குற்றம் சாட்டியுள்ளார். இவரது குற்றச் சாட்டு மறுப்பதற்கு இல்லை.

ஏனெனில், கருணா அணியினர் முகாமமைத்து செயற்படுவது உறுதியாகியுள்ள நிலையிலே அவர்கள் இவ்வாறான தாக்குதல்களை நடாத்துவது என்பது இயலக் கூடிய காரியமே. ஆனால் இந்தத் தாக்குதல் சம்பவங்களோடு ஏதேனுமொரு விதத்திலே இராணுவத்தினரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இந்தத் தாக்குதல்களை நடத்திய அணியினர் இராணுவ சீருடை தரித்திருந்ததாக அவர்களை நேரில் கண்ட பொது மகன் ஒருவர் தெரிவித்துள்ளார். அத்தோடு சிலர் சிங்கள மொழியில் மட்டுமே அதுவும் சரளமாக உரையாடியதாகவும் அவர் தெரிவித்தார். இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது கருணா அணியெனும் புனைபெயரைத் தாங்கி இராணுவப் புலனாய்வு அணியே செயற்பட்டு வருகின்றது என்பதை, அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

கருணா அணியினர் முகாம் அமைத்துள்ள வெலிகந்தப் பகுதியானது, கிழக்கு மாகாணத்துக்காக தரைவழிப் போக்குவரத்துக்கு இலகுவான பகுதியாகும். மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளுக்கு காட்டு வழியினூடாகப் பயணிப்பதற்கு இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள முகாம் மிகுந்த வசதியாகவுள்ளது. இங்கு செயற்பட்டுவரும் கருணா அணியினரே விடுதலைப் புலிப்போராளிகளின் கொலைகளுக்குக் காரணமாக இருந்து வருகிறார்கள். மட்டக்களப்பு, அம்பாறையின் முன்னாள். அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலை கூட இந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலேயே நடைபெற்றது. எனவே இந்தக் கொலைக்கும் கருணா அணியினரே முழுப்பொறுப்பு என்பது நிதர்சனமாகி விட்டது. அத்துடன் இந்த அணியினர் சம்பந்தப்படும் விடயங்களிலே இராணுவ சீருடை தரித் தோரில் பிரசன்னம் இராணுவத்தினருக்கும், அவர்களுக்கும் தொடர்பு இருப்பதை துலாம்பரப்படுத்தியுள்ளது.

கருணா அணியென ஒன்று செயற்படத் தொடங்கிய ஆரம்பத்திலிருந்தே, இராணுவத்தினர் மிக நெருக்கமாக அவர்களோடு இணைந்து பணியாற்றியுள்ளனர். அப்போதைய இராணுவத் தளபதி பலகல்ல மற்றும் பல இரணுவ அதிகாரிகளுடனான தொலைபேசி உரையாடல்கள் எனத் தொடங்கி, இன்று தாக்குதல்களிலே இணைந்து செயற்படுமளவுக்கு இராணுவத்தினருக்கும் கருணா அணியினருக்கும் இடையே மிகுந்த நெருக்கம் பேணப்பட்டு வருகிறது.



கொழும்பு கொட்டாவ பகுதியிலே கருணா அணியினர் சிலர், அவர்களோடு உடனிருந்தோராலேயே சுட்டுக்கொல்லப்பட்ட போது, நீல் தம்மிக்க என்ற இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் அவர்களோடு பலியாகியிருந்தார். ஆனால்இந்த விடயத்தை உடனடியாக விரைந்து இருட்டடிப்புச் செய்ய முற்பட்ட இராணுவம், அவரது சடலத்தையும் அப்புறப்படுத்தியிருந்தது. நீதிமன்ற விசாரணையின் போது இந்த விடயங்கள் அம்பலத்துக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே கருணா அணிக்கும் தமக்கும் தொடர்பு இல்லையென இராணுவத் தரப்பு அடிக்கடி மறுத்து வருவது கேலித்தனமான விடயம். மீண்டும் மீண்டும் சொல்வதன் மூலம் பொய்யை உண்மையாக்கி விட முடியாது. ஆனால் இதனையுணராது அரசும், இராணுவமும் மீண்டும் மீண்டும் தமக்கும் கருணா அணிக்கும் தொடர்பு இல்லையென்றே மறுத்து வருகிறது.

இது இவ்வாறு இருக்க விடுதலைப்புலிகளின் உயர் மட்ட அரசியற் குழுவொன்று ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்டுள்ள அரசியல் சுற்றுப் பயணமானது, தற்போதைய சூழ்நிலையிலே மிகுந்த பயன்மிக்கதாக அமைந்துள்ளது. சுனாமி அனர்த்த மீள் கட்டுமானப் பணிகளுக்கென பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைப்பதிலே அரசு தொடர்ந்தும் இழுபறி நிலையையே பேணிவரும் நிலையில், விடுதலைப்புலிகள் தம்மைச் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகள் அனைவரிடமும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

அவர்களும் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்துள்ளனர். இதனால் அரசுக்கான அழுத்தம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இறுதியிலே மணி கட்டிய மாடு சொல்லி பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதைக் காட்டிலும், தாமாகவே முன் கூட்டியே அதனை உருவாக்கிக் கொள்வது அரசுக்கு அழகானது. ஏனெனில் விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமான சர்வதேச ஆதரவு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. ஐ.நா. சபையி லேயே தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக வேறு மொழி, இனம் சார்ந்த பிரதிநிதிகள் பேசுமள வுக்கு அவர்களுக்கான ஆதரவுத் தளம் பெருகி வருகிறது. இந்த நிலை மிகுந்த சங்கடத்தை அரசுக்குத் தோற்றுவித்துள்ளது. அரசு புரிந்து வரும் மனித உரிமை மீறல்களையும் உலக அரசாங்கமே அம்பலப் படுத்தி வருகிறது. இதனால் இதுவரை முரண்பட்டு நின்றவர்கள் கூட திசை மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கையுடன் செய்ய விருந்த பாதுகாப்பு உடன்படிக்கையானது, இனி எந்தக் காலத்திலும் மேற்கொள்ளப்படமாட்டாது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்திருப்பது இவ்வாறானதொரு மாற்றத்துக்கு உதாரணமாக விபரிக்க முடியும். இலங்கை அரசு தலைகீழாக நின்று முயற்சி செய்தபோதும், இந்தியா அதற்கு உடன்படவில்லை. இது வரவேற்கத்தக்க விடயமே

இவ்வாறு பெருகிவரும் சர்வதேச ஆதரவுத் தளத்தினூடாக பொதுக்கட்டமைப்பு மட்டுமன்றி இடைக்கால நிர்வாக அலகையும் உருவாக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்படும். எனவே இதற்கு முன்னதாக சுயமாகச் சிந்தித்து இனவாத சிந்தனைகளைக்களைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசு முன்வர வேண்டும்.

நேர்காணல்

பட்டணைந்து

# காலவோட்டத்தால் மருவி வரும் நாட்டுக் கூத்துக் கலைகள்

**குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவரும், சமாதான நீதிவானும், புனித யாகப்பர் ஆலயப் பங்குப் பொருளாளருமான கலைஞர் கி.கிறிஸ்தோப்பரை சந்தித்து உரையாடியபோது...**

நேற்றைய தொடர்ச்சி...

**கேள்வி: கலைத்துறைச் சேவைக்காகப் பெற்றுள்ள பாராட்டுக்கள், பட்டங்கள் பரிசுகள் –**

பண்டாரவன்னியன் நாடகத்தில் நடித்ததற்காக 2003 ஆம் ஆண்டு சிறந்த நடிகராகப் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தாலும் 'மலை மேற் கொலை' நாட்டுக்கூத்தில், நடித்தும் இயக்கியதற்காகவும் 2000 ஆம் ஆண்டு நாச்சிக்குடாவில் அருட் தந்தை பீற்றர் அடிகளால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டும், 2004 ஆம் ஆண்டு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தால் 'மரபுக் கலைச் சுடர்' பட்டம் வழங்கி மகுடம் அணிவித்து பொன்னாடை போர்த்தப்பட்டதுடன், மேலும் பல இடங்களில் கௌரவிக்கப்பட்டதையும் குறிப்பிடலாம்.

**கேள்வி : சம காலத்தில் தொய்வடைந்து போயுள்ள நாடககலையுலகை நிமிர்த்துவதற்கு நீங்கள் கூற விரும்புவது?**

–அது கடினமான ஒன்றாகவே சம காலத்தில் இருந்து வருகிறது. ஆயினும் பாரம்பரிய கலைகளை வளர்ப்பதற்காக நம் மத்தியில் உள்ள நிறுவனங்கள்ஊடாகவும் பாடசாலைகளில் சிறார்களுக்குப் புகட்டுவதன் மூலமாகவுமே கலையுலகை மீண்டும் கட்டி எழுப்பலாமென்பது எனது எண்ணம்.

**கேள்வி: மறக்க முடியாத சம்பவங்கள் எதுவும்?**

1980 ஆண்டளவில் 'பொன்மணி' படத்தை இலங்கையில் தயாரித்தவர்கள் கதையின் படி கடல்சார்ந்த பகுதியில் சில காட்சிகளை எடுப்பதற்காக வந்த போது, அவர்களுடன் குருநகரில் இருந்து மண்ணித் தலை என்ற பகுதிக்கு இயந்திரப் படகில் செல்வதான காட்சிகளைப் படமாக்கினார்கள். அதனில் படகை ஓட்டுவராக நானும் நடித்திருந்தேன். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களான நடிக, நடிகைகள் டைரக்டர், ஒளிப்பதிவாளர் மற்றும் உதவியாளர்களுடன் பழகக் கிடைத்ததையும், ஒரு சினிமாப் படத்தைத் தயாரிப்பதில் இருக்கக் கூடிய இடர்பாடுகளையும் முற்றிலும் இலவசமாகக் கற்றுக் கொள்ள கிடைத்த வாய்ப்பை என்னால் என்றுமே மறக்க முடியாதல்லவா?

**கேள்வி :இறுதியாக நீங்கள் கூற விரும்புவது?**

நாங்கள் சிறியவர்களாக இருக்கும் போது நாட்டுக் கூத்துகள் நாள் கணக்காக முழு இரவும் ஆடப்படும். அந்த நிலையை இப்பொழுது காண முடியவில்லை. உலகம் சுருங்கியது போல் காலங்களும் சுருங்கி விட்டன.

அவசர காலத்துக்கேற்ற கலை வடிவங்களையே இன்று அணுக முடியும். அதனால் நாட்டுக் கூத்துகளும் மூன்று மணி நேரங்களாகச் சுருக்கப்பட்டுள்ளன. எனினும் எந்தக் கலை வடிவங்களும் அழிந்து விடுவதில்லை. அவை ஏட்டு, அச்சு வடிவங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இன்று தொலைக்காட்சிகளில் மூழ்கியுள்ள இளைய சமுதாயம் மீண்டுமொரு மாற்றம் கண்டு திரும்பவும், நாட்டுக் கூத்துக்கள் இரவிரவாக நாட்கணக்கில் ஆடப்படுகின்ற காலம் தோன்றுமென்றே நான் நம்புகின்றேன்.

தமிழர் வாழ்வில் சுதந்திரமும், சபீட்சமும் தோன்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அப்பொழுது எமது கிராமங்கள் தோறும் நாடக மன்றங்கள் பூத்துக் குலுங்கும். யாழ். திறந்த வெளியரங்கில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வந்த பௌர்ணமிக்கலை விழாக்களைத் திரும்பவும் நாங்கள் நுகரும் காலம் மலரும்.

(முற்றும்)



# பாரிஸ் ஹோட்டலில் தீ விபத்து
# 20 பேர் பலி; 50 பேர் காயம்!



பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் மத்திய பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பற்றிய தீயில் சிக்கி 20 பேர் உயிரிழந்ததுடன், 50 பேர் எரிகாயங்களுக்கிலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 12 பேரின் நிலை கவலையளிப்பதாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தீவிபத்தில் சிக்கிப் பாதிக்கப்பட்டவர்கள் பலர் ஆபிரிக்க குடியேற்றவாசிகளெனவும், இவர்கள் ஆபிரிக்க நாடுகளிலிருந்து பிரான்ஸில் குடியேறியதாகவும், இவர்களை பிரான்ஸிலுள்ள வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்காக இந்த ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டவேளையே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதிலும் உயிரிழந்தவர்களில் பெருமளவானோர் சிறுவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டலின் முதலாம் மாடியில் பற்றிய தீ மாடிப்படிகளூடாக ஹோட்டலின் ஆறாவது மாடிக்கு பரவியதாக - தீயணைப்பு படையின் பேச்சாளர் லோறன்ட் விப்பேட் தெரிவித்தார்.

தீ மேலும் பரவியதை அடுத்து மேல் மாடிகளில் தங்கியிருந்தவர்களில் பலர் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக யன்னலூடாக குதித்துள்ளனர். அத்துடன் தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோரை மேல் மாடியிலேயே கண்டதாகவும் இந்தத் தொகை மேலும் அதிகரிக்குமென தாம் அச்சமடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

தீப்பற்றியவேளை ஹோட்டலில் 76 பேர் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தீ எவ்வாறு பற்றியது என்பது தொடர்பாக இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. அதே நேரம் இந்த ஹோட்டலில் சகலவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்தபோதிலும், இவ்வாறானதொரு அனர்த்தம் நிகழ்ந்தவேளை ஏன் அங்குள்ளவர்களால் தப்பமுடியாமல் போனதென்பது கேள்விக்குரியதாகவே உள்ளதாக பாரிஸிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் சான்ட்போட் தெரிவித்தார்.

# இஸ்ரேல் படையினர் தாக்குதல்; பலஸ்தீன கிளர்ச்சிவாதி பலி!



(டெல் அவிவ்)

மேற்குக் கரையின் வடபகுதியிலுள்ள அகதிமுகாமில் இஸ்ரேலிய படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது பலஸ்தீன கிளர்ச்சிவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் இப்ராஹிம் ஸ்மெறி (வயது 23) என்ற அல் அக்ஷா மார்ட்டியர்ஸ் பிரிகேட்டைச் சேர்ந்த உறுப்பினரே கொல்லப்பட்டவராவார்.

குறித்த அகதி முகாமுக்குள் அராபியர்கள் போன்று மாறுவேடமணிந்து சென்ற இஸ்ரேல் படையினரின் விசேட படைப்பிரிவு இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக பலஸ்தீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதற்கான சூழ்நிலை எதுவும் தெரியவராதபோதிலும் - தமது படையினர் ஒருவரது மேலங்கி மீது துப்பாக்கி ரவை தாக்கியதற்கான தடயம் இருந்ததையடுத்துத் தாம் திருப்பித் தாக்கியதாக இஸ்ரேல் படையினர் தெரிவித்தனர்.

ஆனால், படையினர் எவ்வித முன்னெச்சரிக்கையையும் விடுக்காமலேயே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் - இதன்பின்னர் உயிரிழந்தவரின் சடலத்தைப் படையினர் வீதி வழியே இழுத்துச்சென்றதாகவும் இந்த முகாமில் வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் படையினரின் இந்தத் தாக்குதலானது இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்துக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணான வன்செயல் நடவடிக்கை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதத்தில் இஸ்ரேல் படையினர் கொன்ற முதலாவது கிளர்ச்சிவாத உறுப்பினர் இப்ராஹிம் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளையின பேரினவாத புள்ளி கனடாவில் சுட்டுக்கொலை!

(ஸ்காபரோ)

ரொறன்ரோவின் ஸ்காபரோ பகுதியில் உள்ள ஒரு தொடர்மாடிக் கட்டடத்தில் குடியிருந்த வெள்ளையினப் பேரினவாத முக்கிய புள்ளி ஒருவர் கடந்த புதன்கிழமை இனம்தெரியாத நபரால் - அவரின் குடியிருப்பிற்கு அண்மையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஜேர்மனியில் ஒரு அதிதீவிர நாஸி ஆதரவுக் குடும்பத்தில் பிறந்த வூல்ப் காங்ட்ரூஜ் - ஜேர்மன் இராணுவத்தில் சேர்வதற்கு 1967 ஆம் ஆண்டு எடுத்த முயற்சி தோல்வி கண்டதை அடுத்து - கனடாவில் குடியேறிய அவர் 1970 ஆம் ஆண்டு கனேடியப் பிரஜா உரிமையையும் பெற்றார்.

கனடாவில் பாரம்பரிய முன்னணி என்னும் முற்றுமுழுதாக நாஸிக் கொள்கைகளை அனுசரிக்கும் அமைப்பை நிறுவி - அதன் இணைத் தலைவராகவும் இருந்து வந்துள்ள இந்த நபர் - கூகிளக்ஸ் கிளான் என்னும் அமெரிக்க அதிதீவிர வெள்ளை இனத்துவேஷக் கும்பலுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார் எனவும் அறியப்படுகிறது.

சிகரட் கடத்தல், போதைப்பொருள் விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த இவர் கடந்த 30 ஆண்டுகளில் 30 இற்கு மேற்பட்ட தடவைகள் அடாவடித்தனத்திற்கும் - சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் - ஆயுதத் தாக்குதல்களை நடத்திய குற்றங்களுக்காகவும் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டவர் எனவும் அறியப்படுகிறது.

வன்முறையில் ஆரம்பித்த அவருடைய வாழ்க்கை வன்முறைக்கே பலியாகி விட்டதென பொலிஸ் அதிகாரி ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்.




# பாப்பரசர் பதவியை ஏற்க மறுத்தவர்கள்

பாப்பரசர் பதவி ஒரு நாட்டின் தலைவருக்கு இணையானதாகும். அத்துடன் மிகக் கௌரவம் வாய்ந்த பதவியும் கூட. 110 கோடி கத்தோலிக்கர்களின் தலைவர். இவர் சொல்வது தான் அவர்களுக்குச் சட்டம். தவிர ரோம் நகர பிஷப்பும் இவர்தான்.

கௌரவமும், அதிகாரமும் ஒருசேரக்கொண்ட இந்தப் பதவியை வேண்டாம் என்று யாராவது சொல்வார்களா? இதற்கு முன் சிலர் அப்படி மறுத்திருக்கிறார்கள்.

வத்திக்கான் தேர்தல் முடிவில் யாராவது ஒருவர் அதிக வாக்குகளைப் பெற்றுப் பாப்பரசராகத் தேர்வுபெற்றுவிட்டால் - கர்தினால் குழுவின் தலைவர் அவரிடம் சென்று நீங்கள் பாப்பரசராகச் சம்மதமா என்று கேட்பார். அதற்கு அவரும் ஆம் என்று சொல்ல வேண்டும். அந்த வார்த்தையைக் கேட்டதும் அடுத்து செய்ய வேண்டியது விழாக்களுக்கான ஏற்பாடுகள் தான்.

1271 இல் செயின்ட் பிலிப் பெனிஸி பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால், பதவியேற்க அவருக்கு விருப்பம் இல்லை. பதவியில் அமர்த்த எல்லோரும் முயற்சிசெய்த போது திடீரென அவர் காணாமற் போய்விட்டார். இதனால் இன்னொருவரைப் பாப்பரசராகத் தெரிவுசெய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சார்லஸ் பொராமியோ எனும் கர்தினாலும் பாப்பரசராகப் பதவியேற்க மறுத்துவிட்டார்.

1978 இல் மிலன் நகர பிஷப்பாக இருந்த 76 வயது கர்தினால் ஜியோவானி கொலாம்போவைப் பல கர்தினால்கள் பாப்பரசராக வேண்டும் என்று தேர்வுசெய்தனர். ஆனால், அவர் தன்னை பாப்பரசராகத் தேர்வு செய்தால் ஒருபோதும் பதவியேற்க மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

அவர் அன்று ஆம் என்று சொல்லியிருந்தால் அவர் பாப்பரசராகப் பதவியேற்றிருக்கலாம். உண்மையான துறவு என்பது எதிலும் ஆசைப்படாதது தான். ஜியோவானி பதவியேற்காதது வரலாற்றில் நிலைத்துவிட்டதுடன் வத்திக்கான் வரலாற்றையும் மாற்றிவிட்டது.


CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

**Project Manager for Income Generating Projects**

CARITAS – Hudec is an Humanitarian Organization. Within the Framework of its 2 Years program for relief after tsunami disaster,
CARITAS – Hudec needs a project manager for income generating activities, in Jaffna.

**Job description**

**Project Manager for Income Generating Projects**
Integrated to the "Social Activities" Department and in charge of the implementation of the income generating projects to be set up under the direction of caritas / Hudec strategy: selection of projects, financial and administrative follow-up and networking with the other Humanitarian Organizations (local and international) involved in Income Generating Projects.

**Requirements**

- Experience in micro – finance, micro – credits / income generating activities
- Good analytic skills
- Fluency in English
- Ability to work on the field and travel extensively
- Good communication skills
- Good team player
- Computer skills (work, excel, internet, tally…)

Please send your application by Friday the 22nd of April to the director of CARITAS Hudec:

*Father Jeyakumar*
*CARITAS – Hudec Jaffna*
*14, Mathew's Road, Deougu Street,*
*Jaffna.*

(125)

PLEASE SPECIFY THE POST YOUR APPLY FOR IN YOUR APPLICATION.


# கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட இன்று இந்தியா வருகிறார் முஷாரப்





முஷாரப் தங்கவுள்ள ஹோட்டல்

(புதுடெல்கி)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நாளை டெல்கியில் நடைபெறும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடுவது உட்பட இந்தியத் தலைவர்களுடன் பல்வேறு பேச்சுக்களை நடத்துவதற்காகப் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் இன்று இந்தியா வருகின்றார்.

மூன்றுநாள் சுற்றுப்பயணமாக தனி விமானத்தில் இஸ்லாமாபாத்திலிருந்து ஜெய்ப்பூர் வரும் முஷாரப் -அங்கிருந்து ஹெலிகொப்டரில் ஆஜ்மீர்தர்காவுக்குச் சென்று தொழுகை நடத்துவார். இதன்பின் அங்கிருந்து டெல்கி செல்லும் முஷாரப்புக்கு டெல்கி விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இதன்பின்னர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் - ஜனாதிபதி முஷாரப்புக்கும் இடையே இருநாட்டு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறும். இதன் பின், இன்றிரவு பிரதமர் மன்மோகன் சிங் - முஷாரப்புக்கு இரவு விருந்தளிக்கவுள்ளார். இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த பெரிதும் உதவுமென இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஷ்மீர் பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் பேச்சு நடத்துவதுடன், இந்தப் பேச்சுக்களின் பின்னர் கூட்டறிக்கை வெளியிடப்படுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து நாளை டெல்கியில் நடைபெறும் இரு நாடுகளுக்குமிடையேயான இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியை இரண்டு நாட்டுத் தலைவர்களும் பார்வையிடுகின்றனர். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உட்பட்டோரும் இவர்களுடன் இணைந்து கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடுகின்றனர்.

போட்டி நிறைவடைந்ததும் மாலை இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் - முஷாரப்புக்கு விருந்தளிக்கின்றார். இதன் பின்னர் ஹீரியத் மாநாட்டு அனைத்து கட்சிக்குழுப் பிரதிநிதிகளும் முஷாரப்பைச் சந்திக்கின்றனர். இதனையடுத்து நாளை மறுதினம் முஷாரப் டெல்கியிலிருந்து பிலிப்பைன்ஸிற்குச் செல்கின்றார்.

இதேவேளை இந்தியாவரும் முஷாரப் குழுவினர் தங்க டெல்கியிலுள்ள ஹோட்டலொன்றில் 70 அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவரும் ஜனாதிபதி முஷாரப்புடன் 30 பத்தரிகையாளர்கள் உட்பட 50 பேர் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# அரசின் போக்கை கண்டித்து வேலணையில் ஆர்ப்பாட்டம்!

## 21 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

இலங்கை அரசாங்கத்தின் அண்மைக்கால அசமந்தப் போக்கை கண்டித்தும், மீள்குடியமர்வு கொடுப் பனவு வழங்கிவிட்டு நிவாரணத்தை நிறுத்தும் அரசின் செயலைக் கண்டித்தும் வேலணை பிரதேச மக்கள் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்றை எதிர் வரும் 21 ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

வேலணை இறங்குதுறையில் மக்கள் ஒன்றுகூடி பேரணியாக வங்களாவடிச் சந்தியை வந்தடைந்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

இதேவேளை மேற்படி கண்டனப் பேரணியில் அனைத்து பொது மக்களையும் கலந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தாக்குதல் இடம்பெற்ற பிரதேசம் தமது கட்டுப்பாட்டில் இல்லையாம்!

## இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் நடந்த தாக்குதலிலேயே - கருணாவின் சகாக்கள் ஐவர் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சொறிவில் கிராமத்துக்கு தெற்காக 1 கி.மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்த தாக்குதலில் கருணாவின் சகாக்கள் ஐவர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ள காட்டுப் பகுதியாகும்.

இந்தக் காட்டுப் பகுதியிலேயே சில தினங்களுக்கு முன்னர் கருணா குழுவினர் முகாம் அமைத்திருந்தனர். இப்பகுதியில் அவர்கள் நடமாடிய போதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்த முகாமில் 10 பேர்வரை தங்கியிருந்திருக்கின்றனர். இங்கு இருந்தவர்களாலேயே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறோம்.

கருணா அணியினரின் பாரிய முகாம்களைத் தாக்கமுடியாத புலிகள் - அவர்கள் நடமாடும்போது இத்தகைய தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சொறிவில் மற்றும் அதனை அண்டிய கிராம மக்களை கருணா அணியினர் மிரட்டியது தொடர்பாக சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க - குறிப்பிட்ட பிரதேசம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறியதுடன், அங்கு அவர்களின் கூட்டம் நடந்திருக்கச் சாத்தியமில்லை எனத் தெரிவித்திருந்தது குறப்பிடத்தக்கது.

## முகாமில் கூட...

தெரிவிக்கப்படுகிறது.

சுமார் பத்துப்பேர் வரை இந்த முகாமில் தங்கியிருந்ததாகவும் இவர்களுடன் கூடத் தங்கியிருந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று இராணுவத்தரப்பும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

அந்தக் காட்டுப் பகுதிக்குள் வேறு தரப்பினர் எவரினதும் நடமாட்டம் அவதானிக்கப்படவில்லை என்றும், தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதற்கான எந்தத் தடயமும் அங்கு காணப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் பெரிதாக துப்பாக்கிச் சண்டைகள் எதுவும்

உயிரிழந்தவர்களின் சடலங்களில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், கூட இருந்தவர்களே தாக்குதல் நடத்தியிருக்க வாய்ப்பிருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

எனினும், காயமுற்ற கருணாவின் சகாக்கள், தம்மீது வெளியாலிருந்தே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த விஜயன் என்ற ஈ.என்.டி.எல்.எவ் முக்கியஸ்தர் இந்தியக் கடவுச்சீட்டை வைத்திருந்தவர் என்றும், இவரே விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்

# கரையோரப் பகுதியில்

# இருநூறு மீற்றர் பாதுகாப்பு வலயம்; யாழ்.மாவட்டத்தில் சாத்தியமில்லை!

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்கு வெளியே வீடுகளை அமைப்பதற்கு அரச சொத்துக்கள், தனியார் காணிகளே இல்லை. எனவே, 200 மீற்றருக்கு வெளியே வீடுகளை அமைக்க முடியாதென தாம் அரசாங்கத்திடம் தெரிவிக்கப்போவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறைப் பகுதியில் 200 மீற்றருக்கு வெளியே வீடுகளை அமைப்பதென்பது மக்களின் இயல்புநிலையை பாதிப்பதாக அமையும். எனவே, இதற்கான மாற்று யோசனைகளையும் அரசுக்கு முன்வைக்கவுள்ளோம்.

இதற்கமைய கடல் அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க கடலினுள் அமைக்கப்பட்ட முருங்கைக் கற்களாலான வேலியை உறுதியாக அமைத்தல், பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ள கடற்பகுதியை அண்டிய சுவர்களை சரிவாகவும், உயரமாகவும் அமைத்தல். கடற்கரைப் பகுதிகளில் ஏதேனும் மாற்றங்கள் நிகழும் பட்சத்தில், அவற்றை கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு அறிவிக்க சிறந்த தொடர்பாடல் வசதிகளை மேற்கொள்ளல் போன்ற செயற்திட்டங்களே முன்வைக்கப்படவுள்ளன.

கடற்கரைப் பகுதியிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின், வல்வெட்டித்துறையில் 75 வீதமான பகுதிகளும், பருத்தித்துறைப் பகுதியில் 40 வீதமான பகுதிகளும் இடம்நகர்த்தப்படவேண்டி நேரிடும்.

இதைவிட - பருத்தித்துறை, தொண்டமனாறு, அல்வாய், பொலிகண்டி கிழக்கு, தும்பளை ஆகிய பகுதிகளில் கணிசமான பகுதிகள் இல்லாமல் போக நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மதிப்பீட்டு அறிக்கை

# 18 ஆம் திகதி கையளிக்கப்படாவிட்டால் 45 பில்லியன் ரூபா பறிபோகும் அபாயம்!

## ராஜித சேனாரத்ன எச்சரிக்கை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்குவது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் உதவி வழங்கும் நாடுகளிடம் சமர்ப்பித்தால் மட்டுமே அரசாங்கம் 45 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பிருப்பதாகவும் -

இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்காவிடின் அந்தத் தொகையை இழக்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுனாமி அனர்த்தம் தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையானது மூன்று முக்கிய விடயங்களைக் கொண்டதாகும். அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பையும் உள்ளடக்கியதாகும்.

பொதுக்கட்டமைப்பு - சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கே அமைக்கப்படவுள்ளது. அத்துடன், சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது மற்றும் நாட்டின் பொருளாதாரத் திட்டம் என்பனவே உதவிவழங்கும் நாடுகளின் முன் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையாகும்.

இந்த அறிக்கையை அரசாங்கம் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் நாம் உலக நாடுகளிடமிருந்து எதிர்பார்க்கும் நிதியுதவியை பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால், இந்தத் திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்குமாக இருந்தால் அது அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. - அரசாங்கத்திலிருந்து எவ்வேளையிலும் வெளியேறுவதற்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தும்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம், தனது ஒரு வருட ஆட்சிக் காலத்தில் பொருட்களின் விலைகள் குறைவடைந்தமை தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்தமையானது, பிழையான நடவடிக்கை என்பதுடன், பொதுமக்களை தவறான வழிக்கு இட்டுச்செல்லவும் வழிவகுக்கின்றது.

உண்மை என்னவெனில், சகல பொருட்களதும் - குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களது விலைகள் அதிகரித்தே சென்றுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 1250 ரூபாவை சம்பள அதிகரிப்பாக வழங்கியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் 2500 ரூபாவை சம்பள அதிகரிப்பாக வழங்கியது.

எனினும், இந்த அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 70 வீதத்தால் சம்பள அதிகரிப்பை வழங்குவதாக உறுதியளித்தபோதிலும், அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில், இந்த அரசாங்கம் தனது ஒரு வருடத்தை கொண்டாடுகிறது.

ஆனால், அரச சேவைகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு இதுவரை நிரந்தர நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருக்கோவில்...

இதன்போது தலையில் பலத்த காயமடைந்த இவர் சில நிமிடங்களின் பின்னர் உயிரிழந்தார்.

இவரின் தலைப் பகுதியில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் இருப்பதாகவும், 9 மி.மீ. கைத்துப்

# பிரமாண்டமான முறையில் இம்முறை மேதினப் பேரணி

யாழ்.மாவட்டத்தில் இந்த முறை மே தின ஊர்வலத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டைந்து, அங்கிருந்து பிறவுண் றோட் ஊடாக நல்லூர் வீதியை வந்தடைந்து நல்லூர் வடக்கு வீதியில் ஊர்வலம் நிறைவுபெறும்.

இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று இராணுவத்தரப்பும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

அந்தக் காட்டுப் பகுதிக்குள் வேறு தரப்பினர் எவரினதும் நடமாட்டம் அவதானிக்கப்படவில்லை என்றும், தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதற்கான எந்தத் தடயமும் அங்கு காணப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் பெரிதாக துப்பாக்கிச் சண்டைகள் எதுவும் நிகழ்ந்தது போன்று சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை என்றும் கிராமவாசிகள் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

நடத்தியிருக்க வாய்ப்பிருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

எனினும், காயமுற்ற கருணாவின் சகாக்கள், தம்மீது வெளியாலிருந்தே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த விஜயன் என்ற ஈ.என்.டி.எல்.எவ் முக்கியஸ்தர் இந்தியக் கடவுச்சீட்டை வைத்திருந்தவர் என்றும், இவரே விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையுடன் நேரடியாகத் தொடர்பட்டிருந்ததாகவும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## ஐந்து சடலங்களே...

இராணுவப் புலனாய்வுப் பிரிவினராகவோ, கருணா குழுவின் முக்கியஸ்தர்களாகவோ இருக்கலாம் என்பதனாலேயே இவை மறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

இதேவேளை - தாக்குதலுக்குள்ளான பகுதியில் மூன்று கொட்டகைகளில் கருணா குழுவினர் தங்கியிருந்ததாகவும் எஞ்சிய ஒரு கொட்டகையில் உணவுப் பொருட்களும் இன்னொன்றில் புதிய உடுதுணிகளும் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

அங்கு 11 சோடி செருப்புக்கள் காணப்பட்டதாகவும் - இதனால் ஓரிருவர் மட்டுமே தாக்குதலில் தப்பியிருக்க வாய்ப்புள்ளதாகவும் அங்கு சென்ற செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தாக்குதல் நடத்தியோர் அங்கிருந்த ஆயுதங்களையும் எடுத்துச்சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## பாதிக்கப்பட்ட...

துறைப்பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அயர்லாந்து உள்துறை அமைச்சருடனான சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது -

முன்மொழியப்பட்ட பொதுக் கட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஏற்றுள்ளனர். ஏனெனில், வெளிநாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்படும் நிதியுதவிகள் சர்வதேச விதிமுறைகளுக்கமைய செலவுகள் தொடர்பான கணக்குகள் காட்டப்படும் என்பதனாலாகும்.

தற்போது நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ள போதிலும், விடுதலைப் புலிகள் மிகவும் நெகிழ்வுத் தன்மையான போக்கை காட்டுவது பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையேயாகும்.

உண்மை நிலையை கண்டறிவதற்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு குழுவொன்றை அனுப்பி நிலைமைகளைப் பார்வையிட வேண்டுமெனவும் அரசியற் துறைப் பெறுப்பாளர் அமைச்சர் லெனிகனை கேட்டுக்கொண்டார்.

கொண்டதாகும். அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்ட

## திருக்கோவில்...

இதன்போது தலையில் பலத்த காயமடைந்த இவர் சில நிமிடங்களின் பின்னர் உயிரிழந்தார்.

இவரின் தலைப் பகுதியில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் இருப்பதாகவும், 9 மி.மீ. கைத்துப்பாக்கியால் சுடப்பட்டே இவர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - இவர் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்துக்கு சமீபமாக பொலிஸ் நிலையம் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் முகாம் என்பன இருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (07)

## சொறிவில்...

ஊடகங்கள் மூலமாகவும் - பொது மக்கள் மூலமாகவும் அறிந்துகொண்டோம்.

கருணாவின் சகாவான பிள்ளையான் குழுவினருக்கும், ஈ.என்.டி.எல்.எவ். விஜயன் குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட உட்பூசலே இந்தச் சம்பவத்துக்குக் காரணமாகும்.

தேசவிரோத சக்திகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்தும் அரசும், இராணுவ புலனாய்வுத்துறையும் தான் இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## படையினருடன்...

செயற்படும் ஆயுதக் குழு உறுப்பினர்களின் படங்கள் இதன்மூலம் அம்பலமாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள மேற்படி இணையத்தளம் -

சிங்களப் பத்திரிகையாளர்களின் உதவியுடன் மேற்படி புகைப்படங்களை விரைவில் வெளியிடவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

களில் விளம்பரம் செய்தமையானது, றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரமாண்டமான முறையில் இம்முறை மேதினப் பேரணி

யாழ்.மாவட்டத்தில் இந்த முறை மே தின ஊர்வலத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே தின ஊர்வலம் தொடர்பாக யாழ்.குடாநாட்டிலுள்ள பொதுஅமைப்புக்கள் அனைத்துடனான சந்திப்பு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோதே மேற்படி முடிவெடுக்கப்பட்டது.

இந்த வருட மேதின ஊர்வலம் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி, கலட்டிச் சந்தியை வந்தடைந்து, அங்கிருந்து பிறவுண் றோட் ஊடாக நல்லூர் வீதியை வந்தடைந்து நல்லூர் வடக்கு வீதியில் ஊர்வலம் நிறைவுபெறும்.

இந்த ஊர்வலத்தில் போராட்ட நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வாகன ஊர்தியும், கோலாட்டம், கும்மி, நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளது. இதைவிட நல்லூர் வடக்கு வீதியில் மேதினத்தைச் சித்தரிக்கும் வகையில் பிரமாண்டமான மேடை ஒன்று அமைக்கப்பட்டு, கூட்டம் நடைபெறவுள்ளதுடன் மேதின உறுதி உரையும் வெளியிடப்படவுள்ளது.

## கருணாவின் சகாக்கள்...

கருணாவின் சகாக்கள் அண்மையில் சொறிவில காட்டுப் பகுதிக்கு மாற்றியிருந்தனர். இந்த முகாம்கள் மீதே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த ஐந்து பேரின் சடலங்களை நேற்றுக்காலை பொலிஸார் மீட்டனர். இருவரின் சடலங்கள் கூடாரம் ஒன்றினுள்ளும், மேலும் மூன்று சடலங்கள் கூடாரத்துக்கு வெளியிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டபோதும் - நேற்றுக் காலையே படையினரும் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்றதாகத் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் அரலகன்வில வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவ வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

காயமுற்றவர்களில் கருணாவின் முக்கிய சகாக்களில் ஒருவரான பிள்ளையான் எனப்படும் கே.யோகராஜா மற்றும் சின்னத்தம்பி மகேந்திரன் ஆகியோர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரால் மீட்கப்பட்ட ஐந்து சடலங்களும் அரலகன்வில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கொல்லப்பட்டவர்களில் ஈ.என்.டி.எல்.எவ். முக்கியஸ்தரான விஜயன் எனப்படும் இரா.பேரின்பநாதன், துரை எனப்படும் சி.கிருஷ்ணபிள்ளை வாசு எனப்படும் தெ.தெய்வேந்திரன், காந்தன் எனப்படும் ஜெயந்தன் ஆகியோரும் அடங்குவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய இலக்கியக் கலைப் பெருவிழாவை சகல மட்டங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியக் கலைப் பெருவிழாவை கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் தொடர்ச்சியாக நடத்தி - பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி பிரதேச விழாக்கள் - மே மாதம் 31 இற்கு முன்னும், மாவட்ட விழாக்கள் - ஜூன் 30 இற்கு முன்னும், மாகாண விழாக்கள் - ஒகஸ்ட் 15 இற்கு முன்னும், தேசிய இலக்கிய கலைப் பெருவிழா 2005 செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்திலும் நடத்துவதென்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய இலக்கிய கலைப் போட்டிகளுக்கான பொது நிபந்தனைகளும், விண்ணப்பங்களும் அடங்கிய சுற்று நிருபம் - தமது பிரதேச செயலகத்துக்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்கள் காரியாலயங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாக, கரவெட்டிப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

இந்தப் போட்டிகள் - பாடசாலை மட்டத்தில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளென இரு பிரிவாகவும், திறந்த போட்டி வயதுக் கட்டுப்பாடற்ற பிரிவாகவும் நடத்தப்படும்.

போட்டிகளில் கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாடகம், எழுத்துப் பிரதி, சித்திரம், நாட்டுப் பாடல், நடனம் (பதிவு செய்யப்பட்ட கலை நிறுவனங்களுக்கு மட்டும்) எனப் பல போட்டிகள் இடம்பெறவுள்ளன. (13)

## புத்தகக் கண்காட்சிக்கு நூல்களை அனுப்பலாம்

(கொக்குவில்)

2005 ஆம் ஆண்டு தேசிய இலக்கியக் கலைப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் நோக்கில் புத்தகக் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட இருப்பதாக நல்லூர்ப் பிரதேச சபை கலாசார உத்தியோகத்தர் மேரி யூபிறேசியா எலிசன் தெரிவித்தார்.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச சபைக்குட்பட்டவர்கள் என்றில்லாமல், இலங்கை முழுவதுமாக இலக்கிய கர்த்தாக்கள், வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் அனைவரும் - தம்மிடம் இருக்கும் நூல்களில் ஐந்தைந்து பிரதிகளை அனுப்பி வைக்கலாம் அல்லது நேரில் ஒப்படைக்கலாமென்றும் அவர் மேலும் கூறினார்.

புத்தகக் கண்காட்சிக்கு வைக்க ஒப்படைக்கும் நூல்கள் - திரும்பவும் அவரவர்களுக்கு ஒப்படைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமுக விஞ்ஞான பிரிவால் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் பற்றிய பெற்றோருக்கான கலந்துரையாடல் - அச்செழு கிழக்கு பேபிபுரத்தில் இன்று மாலை 5 மணிக்கு சிறுவர் பாதுகாப்புக் கள உத்தியோகத்தர் தி.இ.றேகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினர் கேட்டுள்ளனர்.

## கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் அறநெறிப் போட்டிக்கு ஏற்பாடு

(கரவெட்டி)

மாணவர்கள் மத்தியில் அறநெறி அறிவு குறைந்து வருவதைக் கருத்திற்கொண்டு, மாணவர் மத்தியில் அறநெறி விழாப் போட்டியொன்றை நடத்தக் கரவெட்டிப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தப் போட்டிகள் - பண்ணிசை, பஜனை, திருக்குறள் மனனம் என மூன்று வகைப் போட்டிகளைக் கொண்டதாக இருக்கும் .

தரம் 1 முதல் தரம் 13 வரைக்கான மாணவர் சகலரும் பங்குபற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான விதிகள் மற்றும் விளக்கங்கள் யாவும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை விரைவாகப் பிரதேச செயலக கலை கலாசாரப் பேரவைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (13)

## விளையாட்டுவிழா

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுவிழா -

நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தா.றொகன் எதிரிசிங்கவும் , கௌரவ விருந்தினராக வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.இன்பனும் கலந்து கொள்ளவுள்ளனர். (13)

## மின்சாரம் வழங்குவதில் புளியங்கூடல் புறக்கணிப்பு

( ஊர்காவற்துறை )

ஊர்காவற்துறை - புளியங்கூடல் கிராமத்துக்கு இதுவரை மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினர் கவலை தெரிவித்தனர்.

புளியங்கூடலில் மக்கள் மீளக் குடியமர்ந்து 9 வருடங்களுக்கு மேலாகியும், இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இங்கு சுமார் 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

அயற் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கியிருந்தும், புளியங்கூடல் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாது - பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டும், இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (44)

## கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், ஆண்டுப் பொதுக்கூட்டமும் - யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு அருட்தந்தை ஜே.ஜே.மௌலிஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கின் நெறியாளராக அருட்தந்தை ரவிச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கும், கருத்தரங்குக்கும் கத்தோலிக்க ஆசிரியர், மறையாசிரியர், ஓய்வுபெற்ற ஆசிரியர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (13)



சைவப்புலவர் வ.கந்தசாமியின் பணிநலன் பாராட்டு விழாவின்போது சைவ பரிபாலனசபை செயற்குழு உறுப்பினர்களுடன் விழா நாயகன் நிற்பதைப் படத்தில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : ப.நிதர்சாந்
முகவரி : மல்லாகம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றிய திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது

(உடுவில் )

உடுவில் வீதி - மானிப்பாயில் அமைக்கப்பட்ட மகளிர், சிறுவர் மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைமைச் செயலகத் திறப்பு விழாவும், முன்பள்ளி ஆசிரிய சேவையில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் - கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த ஒன்றியத்தின் நிறுவுநரும், வெள்ளிவிழா கண்ட முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு விழா நடத்துநருமான எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பேரறிஞர் அருட்திரு எஸ்.ஜெபநேசன் பிரதம விருந்தினராகவும், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி.வி.செல்லையா, தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்ட பணிப் பாளர் எஸ்.ஜெயராஜ், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் டி.ஆர்.அருமைநாயகம், ஓய்வு பெற்ற அதிபர் க.திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்-

நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.




(44)

## நலன்புரி நிலையங்களில் மலசலகூடங்கள் அமைப்பு

உடுவில் பிரதேச செயலக பிரிவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் வலிகாம அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் சபாபதிப் பிள்ளை, கண்ணகி நலன்புரி நிலையங்களுக்கான மலசலகூடங்களை- பிரதேச செயலர் நிதி உதவியுடன் அமைத்துள்ளனர்.

இதேபோன்று சங்கானைப் பிரதேசத்தில் சலேசியர் நலன்புரி நிலையத்திலும் மலசலகூடங்களையும், கைப்பம்பி திருத்தவேலைகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் வலிகாம அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கப்பண்டா நலன்புரி நிலையத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் வலிகாம அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் கிணற்றுக்கான வடிகால் வேலை முடிக்கப்பட்டுள்ளது.

இத்துடன், இந்த நிலையத்தில் ஓர் மலசலகூடத்தையும் அமைத்து வருகின்றனர்.

இதற்கான நிதி - சங்கானைப் பிரதேசசெயலரால் வழங்கப்பட்டு வருகிறது.

## முறைசாராக் கற்கை நெறியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட முறைசாரா தொழிற்திறன் பயிற்சிநெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் - எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொழிற்திறன் பயிற்சிநெறியில் கணினி, கணினி தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) சாரதி பயிற்சி, வீட்டுமின் இணைப்பு, தலை அலங்காரம், உடையமைப்பு, உணவு பதனிடலும் சந்தைப்படுத்தலும் போன்ற பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சிநெறி யாழ். மத்திய கல்லூரி, சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங் கால் மகாஜனாக் கல்லூரி, அச்சு வேலி புனித திரேசாள் மகளிர் கல் லூரி, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றன.

## நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

வடபுலத்து இடதுசாரி இயக்கத்தின் இரண்டாவது தலைமுறையைச் சார்ந்த அமரர் வி.சின்னத்தம்பியின் 4 ஆவது நினைவு தினம்- நாளை மாலை 4 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலம் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் வள ஆளணியினருக்கான ஆங்கில தொடர்பாடல் மற்றும் நுட்ப அபிவிருத்திப் பட்டறை - இன்றும், நாளையும் யாழ். கனகரட்ணம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## விவசாய சம்மேளனத்துக்கு பிரதிநிதி ஒருவர் தெரிவு!

விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதியாக இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.திருக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்- பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலேயே சம்மேளனங்களின் பிரதிநிதி தெரிவு இடம்பெற்றது.


உடுவில் கமநல சேவைத்திணைக்களத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் குறைகளையும், விவசாயிகளின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பான கருத்துக்களை மாவட்டக் கூட்டத்தில் பரிமாற்றம் செய்வதற்கே இந்தப் பிரதிநிதி தெரிவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் 50 சிறுவர்களுக்கு சேமிப்பு கணக்கு ஆரம்பிப்பு

(கிளிநொச்சி)

பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு வைப்பு கிளிநொச்சியிலுள்ள சமூகப் பொருளாதார அபிவிருத்தி வங்கியில் நேற்று முன்தினம் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

புலம் பெயர்ந்து லண்டனில் வசித்துவரும் உறவுகளில் ஒருவரான பிரபாகரன் தனக்கு குழந்தை கிடைக்கப்பெற்றதை முன்னிட்டே இந்தச் சேமிப்புக் கணக்கை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நலத்திட்டப் பணிப்பாளர் ரவி ஊடாக ஆரம்பித்துவைத்துள்ளார்.



வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் போர்ச் சூழல் காரணமாகவும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் பெற்றோர்களை இழந்து, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர் இல்லங்களைச் சார்ந்த சிறுவர்களுள் ஒருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாப்படி, தனது குழந்தை உட்பட 51 சிறுவர்களுக்கு இந்தச் சேமிப்புக் கணக்கு வைப்பை பிரபாகரன் ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கிமேலாளர் சிறீஸ் கந்தராஜா முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் - குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தைச் சார்ந்த சிறுவர்களுக்கும் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

## பறநாட்டகல் கிராம மக்களை மீளக்குடியமர்த்தக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கிலுள்ள பறநாட்டகல் கிராமத்தில் மீளக்குடியேற அனுமதிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்கள் கடந்த 8 ஆண்டுகளாகச் சொந்த இடத்துக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளனர்.

மக்களின் வாழ்விடங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி, மக்களைத் தமது சொந்த இருப்பிடத்தைப் பார்ப்பதற்கு கூட அனுமதிக்காத நிலை காணப்படுகிறது.

இவர்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (03)

## தற்போதைய மழை காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் அண்மை நாட்களாகப் பெய்துவரும் மழை காரணமாக, மிளகாய்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக மிளகாய் அறுவடை செய்த நிலையில், இதனைப் பதப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பெருமளவு நட்டத்தைத் தாம் எதிர்கொண்டுள்ளதாகவும் மிளகாய்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவளை பூநகரிப் பிரதேசத்தில் சிறுதானியச் செய்கையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட சிறுதானியங்களுக்கு உரிய முறையில் சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமூக பொருளாதார அக்கறையுள்ள நிறுவனங்கள் - விவசாய நடவடிக்கையில் இவ்வாறான பாதிப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் பூநகரிப் பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.







வவுனியா மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு பெருந்தோட்டப் பகுதி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும் படத்தில் காணலாம். (03)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா திறப்பு விழா - இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வின் பிரதமவிருந்தினராக கிளிநொச்சிமாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

## திருமறைக் கலாமன்றத்தில் ஓவியக் கண்காட்சி

(வவுனியா)

வவுனியா - வைரவப்புளியங்குளம் பிரதேசத்தின் திருமறைக் கலாமன்ற பணிமனையில் ஓவியக் கண்காட்சி - எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஓவியக் கண்காட்சியானது சுனாமி கடல் அனர்த்தத்தைச் சித்தரிக்கும் வகையில், 'கடல் வரைந்த ஓவியங்கள்' என்ற தலைப்பில் இந்த ஓவியக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம் திறந்துவைக்கவுள்ளார்.

இதேபோன்று எதிர்வரும் 26 ஆம் திகதி திருகோணமலை திருமறைக்கலாமன்றப் பணிமனையிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

## உவர் மண் புழுதியால் சூழல் மாசடைகிறது!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலைக் கிராமத்தில் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் உவர்மண் புழுதியினால் சூழல் மாசடைவதாக, இந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த உவர் மண் புழுதியினால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக 300 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை அண்மையில் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கையளித்தனர்.

இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

இதனைத் தடுப்பதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து, உடன் வழங்குமாறு முல்லைத் தீவு பிரதேச செயலக பொறியியலாளர் தெரிவித்ததையடுத்து, இந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் - 16

1853 : இந்தியாவில் முதன் முதலாக ரயில் போக்குவரத்து தொடங்கியது. மும்பாய் நகருக்கும் உ தானா நகருக்கும் இடையே இந்த ரயில் ஓடவிடப்பட்டது.

1888 : திரவ ஒட்சிசனை உருவாக்கிப் புகழ்பெற்ற விஞ்ஞானியான போலந்து நாட்டைச் சேர்ந்த ஃப்ளாரண்டி - வொன்ரோபிள்வஸ்கி தனது ஆய்வு கூடத்தில் மண்ணெண்ணை விளக்கில் இடறி விழுந்து தீப்பிடித்து இறந்தார்.

1917 : எட்டு நாட்களுக்கு முன் - பூட்டப்பட்ட ரயிலில் சுவிட்சலாந்தில் இருந்து புறப்பட்ட லெனினும் மற்றைய தலைவர்களும் பெட்ரோகிராப் வந்து சேர்ந்தனர்.

1918 : பிரிட்டனில் இராணுவ சேவைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1919 : ரூமேனியா - ஹங்கேரி மீது படையெடுத்தது.

1922 : ராபெல்லா ஒப்பந்தத்தில் ரஷ்யாவும், ஜேர்மனியும் கையெழுத்திட்டன.

1925 : துருக்கியில் தனி குர்திஸ்தான் தாயகம் கேட்டு புரட்சி செய்த குர்திஸ் இனமக்கள் மீது அரசுப் படையினர் மோசமான அழிவை ஏற்படுத்தி அடக்கினர்.

1935 : பசுபிக் மா கடலைக் கடந்து சென்ற முதலாவது போக்குவரத்து விமானம் பறந்தது. பான் அமெரிக்கன் கிளிப்பர் போக்குவரத்து விமானம் சான் பிரான்சிஸ்கோவிலிருந்து ஹவாய்க்கு பறந்து சென்றது.

1944 : பிரித்தானிய அரச பிரதிநிதியான மவுண்பேட்டன் இந்தியாவின் டில்லியில் இருந்து தனது தலைமை அலுவலகத்தை கண்டிக்கு மாற்றினார்!

1947 : அமோனியம் நைத்திரேட் ஏற்றிவந்த கிராண்ட் காம் என்ற கப்பல் கால்வெஸ்டன் குடாவில் விபத்தில் அகப்பட்டு, வெடித்துச் சிதறியது. கரையில் இருந்த டெக்ஸாஸ் நகரைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் வரை காயமடைந்ததோடு, பல தொழிற்சாலைகள் உட்பட டெக்ஸாஸ் நகரத்தின் மூன்றிலொரு பகுதி எரிந்து சேதமாகியது.

1958 : D.N.A கட்டமைப்பு பற்றி விவரித்துப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் உயிரியல் விஞ்ஞானியான ரோஸலிங்ட் எல்ஸி ப்ராங்லின் என்ற பெண்மணி 38 வயதில் காலமானார்.

1972 : ஜோன்க ஜொங் தசார்ளஸ் ட்யூக் என்ற இரு விண்வெளி வீரர்களுடன் அப்பலோ - 16 என்ற விண்கலம் ஏவப்பட்டது. இவர்கள் இருவரும் திரும்பிவரும் போது, நிலவில் இருந்து 71 கிலோ நிலாமண் எடுத்து வந்தனர்.


1991 : தீவிரவாதிகளது பிடியில் ஆப்கான் தலைநகர் அகப்பட, ஜனாதிபதி நஜிபுல்லா ஐக்கிய நாடுகள் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார்.

1993 : குவைத் அரசின் மிக உயர்ந்த பதக்கமான முபாரக் அல் கபீர் பதக்கம் வளைகுடாப் போரைத் தலைமை தாங்கி நடத்தியதற்காக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்சிற்கு வழங்கப்பட்டது.

1994 : அந்நிய நாட்டு கேபிள் தொலைக் காட்சிகளுக்கு சீனா அனுமதி அளித்தது.

1999 : எமது சூரியத் தொகுதிக்கு மிகவும் நெருங்கிய சூரியத் தொகுதி ஒன்றை சன்பிரான்ஸிஸ்கோ விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இது 44 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளது.

தொகுப்பு - சந்துரு




## வவுனியா - தாஸ் நகரில் முன்பள்ளி திறந்து வைப்பு

(வவுனியா)

வவுனியா - மகா இறம்பைக்குளம் தாஸ் நகரில் கெயர் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளி - கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப் பட்டது.

இந்த முன்பள்ளிக் கட்டடத்தை வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். முன்பள்ளியின் பெயர்ப்பலகையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் வவுனியா நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா, கிராம உத்தியோகத்தர் யூசுப் நசார், பிரதேச செயலர் சுகந்தினி துரைச்சாமி ஆகியோர் உட்பட, பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கும், முதியோர்களுக்கும் புத்தாண்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. (03)

## கழகங்களுக்கிடையிலான போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினரும், பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பரந்தன் பிரதேசத்துக்குட்பட்ட சகல கழகங்களும் கலந்து கொள்ளவுள்ள இந்தப் போட்டி தொடர்ந்து இரவுவரை நடைபெறவுள்ளது.